PUBLIC LIBRARY

ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

04.09.2013 - மலர் 10, இதழ் 27



## விசில் ஒலியை பேசும் மொழியாகக் கொண்ட நாடு!



## துணிவிரிப்பு இல்லாத நவீன குடை!



## பண்டைய கிரேக்க வரலாறு

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்பதி பிரவுன்ட்ரிக்

மெய்ட்லண்ட் தேசாதிபதியின் ஆட்சிக்காலம் முடிவிற்கு வந்தது. இதன்பின் ரொபர்ட் பிரவுன்ட்ரிக் என்பவர் இலங்கைக்கு ஆள்பதியாக நியமிக்கப்பட்டார். கி.பி.1812 மார்ச் மாதம் 11 ஆம் திகதியே அந்நிகழ்வு நிகழ்ந்தது. அவரது ஆட்சிக்காலத்தில் நடந்த மிக முக்கிய வரலாற்று நிகழ்வுதான் கண்டியை ஆங்கிலேயர் கைப்பற்றியமையாகும். கொம்பனித்தெருவில் ரோயல் பூங்கா உருவாக்கப்பட்டமையும் இதே ஆண்டுதான். இதற்கு முன்னர் அதாவது 1799 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஜோசப் ஜொய்ன்வில் என்பவரின் நிர்வாகத்தில் சேதவத்தையில் இத்தகைய பூங்கா ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. புகையிலை வர்த்தகத்தை ஏகபோக உரிமையாக்கியதும், கல்பிட்டியில் நீதிமன்றம் ஒன்றைத் திறந்ததும் உயர்நீதிமன்றத்தை இரு பிரிவுகளாக வைத்திருப்பதை நீக்கியதும் ரிக்ஸ் டொலர் பணமுறையில் மாற்றத்தைக் கொண்டுவந்ததும் இந்த தேசாதிபதியின் காலத்தில் நிகழ்ந்த ஏனைய முக்கிய நிகழ்வுகளாகும்.

கண்டி இராச்சியத்தில் அக்காலத்தில் இருந்த நிலைமை பிரவுன்ட்ரிக் ஆள்பதியின் விசேட அவதானத்திற்குட்பட்டது. மன்னன் மீது பகைமை பாராட்டிய பிரதானிகளின் பக்கம் ஆங்கிலேயரும் ஒன்றிணைந்து விட்டனர் என கண்டி மன்னன் எண்ணினான். இதனால், ஆங்கிலேயருக்கு எதிராக யுத்தம் ஒன்றை மேற்கொள்ள மன்னன் ஆயத்தமாகின்றான் என்ற தவறான செய்தி கரையோரப் பிரதேசமெங்கும் பரவியது. அத்தோடு, மற்றுமொரு ஐரோப்பிய இனத்தவர் கண்டிக்கு வந்திருப்பதாகவும் செய்திகள் பரவின. கண்[டி] மன்னன், கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்காக பிரெஞ்ச் கடற்படை வரும்வரை காத்திருப்பதாகவும் மற்றொரு செய்தியும் பரவியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசாயனக் கரைசலில் இருந்து நுண்ணிய கட்டமைப்புகள்






விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

**முதற்கட்டமாக பூக்கள், தண்டுகள், பூச்சாடிகள் உருவாக்கம்**

அமெரிக்காவின் ஹாவர்ட் பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் ரசாயனக் கரைசலைப் பயன்படுத்தி நுண்ணிய பூக்கள், தண்டுகள், பூச்செடிகள், பூச்சாடிகள் என்பன உருவாக்கப்பட்டுள்ளன. சுயமாக வளரக்கூடிய நுண்ணிய கட்டமைப்புக்களாகவே இவை கருதப்படுகின்றன. அமெரிக்க ஹாவர்ட் பல்கலைக்கழகத்தின் புதியதோர் ஆய்வின் வெற்றியாகவே இது உள்ளது.

ஹாவர்ட் பல்கலைக்கழகத்தின் படிக வளர்ச்சித் துறை சிரேஷ்ட விஞ்ஞானி விம் நூர்டூன் தலைமையிலான குழுவினரே இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இதற்காக நீருள்ள கண்ணாடிக் குவலையில் பேரியம் க்ளோரைட் எனும் பேரியம் உப்பையும் சோடியம் சிலிகேட்டையும் கலந்துள்ளனர். இதன்போது, காற்றிலுள்ள காபனீரொக்சைட் இயற்கையாகவே நீரில் கரைவதனால், அங்கு நிகழும் எதிர்விளைவின்மூலம் பேரியம் காபனேற் படிகம் உருவாகின்றது. இதன் இடைவிளைவாக படிகத்தை சூழவுள்ள கரைசலின் pH அளவு வெகுவாகக் குறைகின்றது. இதன் பின்னரே, ஏற்கனவே நீரில் கரைந்துள்ள சோடியம் சிலிகேட், எதிர்விளைவைக் காட்ட ஆரம்பிக்கின்றது. வளரும் கட்டமைப்பின் இரண்டாவது எதிர்விளைவு காரணமாக, சிலிக்கா அடுக்கொன்று சேர்க்கப்படுகின்றது. இதற்காக கரைசலில் உள்ள அமிலம் பயன்படுத்தப்படுகின்றது. இதனூடாக பேரியம் காபனேற் படிகங்கள் தொடர்ச்சியாக வளர்வதற்கு இடமளிக்கப்படுகின்றது.

குறித்த கரைசலினுள் வைக்கப்பட்ட கண்ணாடித் தட்டொன்றின்மீதே இந்த படிக வளர்ச்சியை மேற்கொண்டதாக ஆய்வுக் குழுவினர் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு வளரும் படிகங்களை தமக்குத் தேவையான வடிவத்திலும் வளையும் தன்மையைக் கொண்டதாகவும் அதன் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் அவர்கள் வெற்றி அடைந்துள்ளனர்.







"இதற்கமைய, கரைசலினுள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடித் தட்டின் மீது கானேஷன் மற்றும் மெரிகோல்ட் மலர்களின் வடிவம் கொண்ட மலர்கள் உருவாக்கப்பட்டன. பல நுண்ணிய துணிக்கைகளைச் சேர்த்தே இவற்றை உருவாக்க முடிந்தது" என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

கரைசலில் அடங்கியுள்ள ரசாயனக் கூறுகள் பரவியுள்ள விதத்தின் அடிப்படையிலேயே படிகங்களின் வடிவம் உருவாகும் செயற்பாடு தங்கியுள்ளது.

குறித்த ரசாயனக் கரைசலில் நிகழும் எதிர்விளைவுகளின் அடிப்படையிலேயே பல தரப்பட்ட பூக்கள், தண்டுகள், இலைகள், மொட்டுக்கள் உருவாகின்றன. ரசாயன மாற்றங்களின் செல்வாக்கின் அடிப்படையில் இயற்கையில் இவ்வாறான வளர்ச்சிகள் ஏற்படுவது ஆச்சரியமான நிகழ்வன்று. உதாரணமாக: கடல் நத்தைகளின் மேற்புற ஓட்டுப் பகுதியானது, நீரினுள் நிகழும் ரசாயன மாற்றங்களின் எதிர்விளைவுகளினால் உருவாகும் கல்சியம் காபனேற்றினாலேயே உருவாகியுள்ளது. மனித கருவுக்கு மனித சரீரத்தின் வடிவத்தினைக் கொடுப்பதும் ரசாயன மாற்றங்களினால் கிடைக்கும் சமிக்ஞைகளாகும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

"உரிய நேரத்தில் pH அளவுகளை மாற்றுவதனூடாக, சுருள் வடிவம், வளைவுத்தன்மை ஆகிய வடிவங்களைப் பெற முடியும்.இந்த நுண்ணிய கட்டமைப்புகளை இலத்திரனியல் நுணுக்குக்காட்டியினூடாகத்தான் பார்க்க முடியும். அதன்போதே அவற்றின் சரியான தோற்றத்தினை நீங்கள் காணலாம். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பார்க்கும்போது, கடலுக்கடியில் காணப்படும் பவளப்பாறைகள் மற்றும் கடற்பாசிகளுக்கு இடையில் மிதப்பது போன்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும்" என படிக விஞ்ஞானி நூர்டூன் தனது அனுபவத்தைப் பகிரும்போது தெரிவித்தார்.

**கவிதா**

**வாசகர் முகம்**

இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
**மர்யம் முன்ஸிக்**
வியாங்கல்லை.



DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேதிக விபரங்களுக்கு
பெயர் / முகவரியை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப் பயிற்சி/உரையாடல் வீடியோ சீடி - 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று தமிழ் மூலம.
@- அழகிய கைக்கடிகாரம (Watch) ஒன்று / மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோருக்கும் வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/= மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 081-2227711 / 0773 123 523

noolaham.org | aavanaham.org

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....



32

பன்-பாலா

## சோமாலிய கடற்கொள்ளையர்கள்!

**இதுவரை...**

அஷ்வின், தான் எவ்வாறு ரொபோக்களின் இயக்கத்தை கட்டுப்படுத்தினேன் என்பது முதல் விமானத்திற்கு வந்தடைந்தது வரை தனது வீரசாகசங்களை பெருமையோடு இராமபுத்திரனிடம் கூறிக்கொண்டிருந்தான். அதேவேளை, அவர் சிறுவர்கள் மூவரையும் அடியோடு இல்லா தொழிக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார்.

**இனி...**

இராமபுத்திரன் திட்டப்படி பிசிறில்லாமல் காரியம் நடக்குமாயின், இனி ஆகப்போவது இது தான், இராமபுத்திரன் விமானத்தின் வேகத்தை அதிகரிப்பார். விமானம் வேகமாகவும் அதேநேரம் மிக உயரமாகவும் பறக்கும். திடீரென அவசரகால கதவு வழியாக விமானத்திலிருந்து கீழே குதிப்பார். அவர் அணிந்திருப்பது எவ்வளவு உயரத்திலிருந்தும் கீழே குதிக்க உதவக்கூடிய பாதுகாப்பு அங்கி. அந்த உயிர் காக்கும் கவசத்தின் உதவியோடு கீழே பரந்து கிடக்கும் கடலின் மீது குதித்து அவர் தப்பிவிடுவார்.

சிறுவர்கள் மூவரும் அந்தத் தட்டு விமானத்துக்குள்ளேயே சிக்கி, அதுபோகும் வேகத்துக்கு அலைக்கழிக்கப்பட்டு, அது விழுந்தோ அல்லது வெடித்துச் சிதறியோ நாசமாகும்போது அவர்களும் சேர்ந்து அழிந்து போவார்கள்.

அவ்வாறே, தனது திட்டத்தின்படி விமானத்தின் வேகத்தை அதிகரிக்கலானார் இராமபுத்திரன். விமானம் குலுங்க ஆரம்பித்தது.

"என்னாச்சு....?" என்று அஷ்வின் அச்சத்துடன் கேட்டான்.

"பயப்படவேண்டாம்" என்று இராமபுத்திரன் சமாதானமாகக் கூறினார்.

"சரி, நாங்கள் எங்கே இறங்கப் போகிறோம்?" என்று சுதன் பதட்டத்தோடு கேட்டான்.

"அதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டுக் கேலியாகச் சிரித்தார் இராமபுத்திரன்.

பிரியன் பக்கவாட்டிலிருந்த ஜன்னல் வழியாகக் கீழே பார்த்தான்.

நீலக் கடல்....

அதேநேரம் விமானத்திலிருந்து குதிக்கத் தயாராகிக்கொண்டிருந்தார் இராமபுத்திரன். அவர் முகத்தில் துளிர்த்தது வெற்றிச் சிரிப்பு.

ஆனால், அவரது தவிப்பும் துடிப்பும் முனைப்பும் முகபாவனையும் சிறுவர்கள் மூவருக்கும் சந்தேகத்தை உண்டாக்கிவிட்டதை அவர் அறியவில்லை. மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். அடுத்த விநாடி, மூவரும் ஆசனத்தோடு இணைக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பட்டிகளை விலக்கியபடி அதிரடியாகப் பாய்ந்தார்கள். அவ்வளவுதான்.

'ஆ' வென்ற அலறலோடு மல்லாக்க விழுந்தார் இராமபுத்திரன். அவரது கால்பட்டு விமானத்தின் விசை ஒன்று அழுத்தம் பெற, விமானம் சுழல ஆரம்பித்தது. இராமபுத்திரனின் தலையில் அடிபட்டதால் அவர் மூர்ச்சையாகிப் போனார். விமானம் இப்பொழுது கீழ் நோக்கி இறங்க ஆரம்பித்தது. சுதன் பீதியோடு கீழே பார்த்து,

"ஐயோ! கீழே பார். விமானத்துக்கு நேராக கீழே கப்பல் ஒன்று நிற்கிறது" என்று கத்தினான்.

"அப்படியானால் அவ்வளவுதான். கப்பலின்மீது இந்த விமானம் விழுந்தால் வெடித்துச் சிதறிவிடுமே!" என்று பிரியன் கூறினான்.

"நாம் விமானத்தில் இருந்து கடலில் குதிப்போம்!" என்று சுதன் யோசனை சொன்னான்.

"ஆம்! வேறு வழியில்லை" என்றவாறே விமானக் கதவைத் திறந்து குதிக்கத் தயாரானான் அஷ்வின். கடல் நெருங்கிக் கொண்டிருந்ததால் அவர்களின் முடிவு அபத்தமானதாக இருக்கவில்லை. திடீரென்று குதித்தார்கள். இதேவேளை, அந்தத் தட்டு விமானம் கடலில் விழுந்தது. விழுந்த வேகத்தில் படகுபோல மிதந்து விரைந்து செல்லவும் ஆரம்பித்தது.

சிறுவர்கள் மூவரும் கடலில் தத்தளிப்பதை கப்பலில் இருந்தவர்கள் கவனித்தார்கள். ஏணியை இறக்கி சிறுவர்கள் மூவரையும் கப்பலில் ஏற்றிவிட்டார்கள். மூவரும் நடுக்கத்துடன் கப்பலின் மேல் தளத்திற்கு வந்த



போது... நீரில் போய்க்கொண்டிருந்த தட்டு விமானம் கற்பாறையொன்றின் மீது மோதி 'டமார்' என்ற சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதேவேளை, கப்பலின் மேல் தளத்தில் ஆறுபேர் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த ஆறு பேரினது கைகளிலும் இயந்திரத் துப்பாக்கிகள் இருந்தன. அவர்கள் கன்னங்கரேல் உடம்பு, பரட்டைத் தலை முடி, பெருத்த உதடுகள், பருத்த கன்னங்களுடன் சோமாலியா கடற்கொள்ளைக்காரர்கள் போன்று தோன்றினார்கள்.

ஒரு மூலையில் பத்துப் பேர் வரை கயிற்றால் கட்டப்பட்ட நிலையில் அமர்ந்திருந்தார்கள். ஆம்! சோமாலிய கடற்கொள்ளைக்காரர்களேதான். கப்பலைக் கடத்தி மாலுமிகளைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கிறார்கள்.

அந்த ஆறு சோமாலிய கடற்கொள்ளைக்காரர்களில் ஒருவன், அவர்கள் மூவரையும் மாலுமிகள் இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றான். தலைமை மாலுமி சிறுவர்கள் மூவரையும் மிக ஆழமாக ஊடுருவிப் பார்த்தான்.

(தொடரும்)

# ஏமாளி

கருங்குழி என்னும் கிராமத்தில் ஒரு விவசாயி இருந்தான். ஒருநாள் அவன் தன் கழுதையை கயிற்றினால் கட்டி வீட்டுக்கு இழுத்துச் சென்றுகொண்டிருந்தான். வழியில் ஒரு திருடன் அந்த விவசாயியைப் பார்த்து அவன் ஒரு ஏமாளி என்பதைப் புரிந்து கொண்டான்.

புத்திசாலியான அந்தத் திருடன் தன் நண்பனைப் பார்த்து, "அந்த விவசாயி இழுத்துச் செல்லும் கழுதையை அவன் அறியாவண்ணம் திருடவேண்டும்" என்று கூறினான். அவன் நண்பனும் வியப்பு மேலிட "நண்பா, எப்படி அந்தக் கழுதையை அவன் அறியாவண்ணம் திருட முடியும்?" என்று ஆவலுடன் கேட்டான். அதற்கு அந்தத் திருடன், "சத்தமின்றி என் பின்னாலேயே வா. உனக்கு எல்லாம் புரியும்" என்று கூறினான்.

அந்த விவசாயியின் பின்னாலேயே ஓசையின்றிச் சென்ற திருடன் கழுதையைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டு, கழுதையை ஓட்டிச்செல்லுமாறு தன் நண்பனுக்கு சைகை செய்தான். பின்னர் அந்தக் கயிற்றைத் தன் கழுத்தில் கட்டிக்கொண்டு அவன் பின்னாலேயே சென்றான். தன் நண்பன் ஓட்டிச்சென்ற கழுதை கண் பார்வையை விட்டு மறைந்ததும், அவன் நகராமல் அப்படியே நின்றுவிட்டான்.

கழுதையை இழுத்து வந்த விவசாயி கயிற்றை இழுத்துப் பார்த்து அது வராததால், திரும்பிப் பார்த்தான். தன் கழுதைக்குப் பதில் அந்தக் கயிற்றில் ஒரு மனிதன் இருப்பதைக் கண்டு திகைத்தான். "நீ யார்?" என்று அவனைப் பார்த்துக் கேட்டான் விவசாயி. உடனே அந்தத் திருடன் கண்களில் கண்ணீர் மல்க, "ஐயா! நான் தங்கள் கழுதைதான்... என் கதை வேடிக்கையானது. இளம் வயதிலிருந்தே நான் கெட்டவனாக இருந்தேன். என்னிடம் அனைத்து தீய பழக்கங்களும் இருந்தன. ஒருநாள் நன்றாகக் குடித்துவிட்டு, வீட்டுக்குப்போனேன். என் தாயார் எவ்வளவோ அறிவுரை சொன்னார்கள். நான் அவர்களைப் பிடித்துத் தள்ளியதோடு நன்றாக அடித்தும் விட்டேன். என் கொடுமை தாங்க முடியாமல் அவர் என்னை "கழுதையாகப் போ" என்று சாபம் கொடுத்து விட்டார். நான் உடனே கழுதையாக மாறிவிட்டேன். என்னை நீங்கள் சந்தையில் வாங்கினீர்கள். அத்துடன், என்னை அடித்து உதைத்து துன்புறுத்தி கொடுமைப்படுத்தினீர்கள். நான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு, உங்களுக்கு உண்மையாக உழைத்தேன்.

இன்றுதான் என் அம்மா என்மேல் இரக்கப்பட்டு எனக்காக கடவுளிடம்



பிரார்த்தனை செய்திருக்கிறார். அதனால், எனக்கு என் சுய உருவம் வந்துவிட்டது" என்றான். இதைக் கேட்ட விவசாயி, "ஐயோ! நீ மனிதன் என்று தெரியாமல், உன்னை அடித்துத் துன்புறுத்தி விட்டேன். என்னை மன்னித்து விடு" என்று அவன் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டான். ஒரு வாரத்தின் பின்னர் விவசாயி கழுதை ஒன்று வாங்குவதற்காக சந்தைக்குச் சென்றான். அங்கே அவனது கழுதை விற்பனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கழுதை தன் முதலாளியைக் கண்டதும் சந்தோஷத்தில் கத்தியது. அதைப் பார்த்த அந்த விவசாயி அதன் அருகே சென்று "மடப்பயலே! மீண்டும் குடித்துவிட்டு, உன் தாயை அடித்தாயா? அவரது சாபத்தால் மீண்டும் கழுதையாகிவிட்டாயா? இம்முறை உன்னை வாங்குவதற்கு என்னை என்ன மடையன் என்று நினைத்தாயா?" என்று கத்திவிட்டு, மிகுந்த கோபத்துடன் அங்கிருந்து சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசில் ஒலியை பேசும் மொழியாகக்கொண்ட நாடு



கெனேரி தீவுக்கூட்டத்திற்குச் சொந்தமான லா கொமேரா தீவிலுள்ளோரே விசில் மொழியை பேசுகின்றனர். இந்த விசில் மொழியை 'சில்போ' என அழைக்கின்றனர். நெடுங்காலத்திற்கு முன்னரே அதாவது, 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் இந்த விசில் மொழியை இத்தீவிலுள்ள மக்கள் அனைவரும் பேசினர். தற்போது இம்மொழி அழியும் தருவாயில் உள்ளமையால், அதனைப் பாதுகாப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைபடுத்தியுள்ளனர்.


1950 களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, இத்தீவில் வாழ்ந்த மக்கள் சில்போ மொழி பேசுவதைக் கைவிடவேண்டி இருந்தது. இம்மொழி பேசியவர்களில் பெரும்பான்மையானோர் தொழிலுக்காக தாம் வாழ்ந்த இப்பிரதேசத்தைக் கைவிட்டு வெளிநாடுகளுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இந்த விசில் மொழி முற்றாக அழிந்துபோகும் அல்லது நீங்கும் நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. எனினும், தற்பொழுது சில்போ மொழிக்கு அந்நாட்டு ஆட்சியாளர்கள் உத்தியோக பூர்வமாக விசேட பாதுகாப்பை பெற்றுக்கொடுத்துள்ளனர். அது பாதுகாக்கப்பட வேண்டிய அந்நாட்டுக்கே உரித்தான கலாசார உரிமை என அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.



குறுகிய ஒலி சிலவற்றை மாத்திரமே கொண்ட இம்மொழியில் எந்த ஒரு மொழிமூலம் நாம் பேசும் விடயங்கள் அனைத்தையும் இம்மொழி மூலமும் முன்வைக்கலாம்.

சில்போ மொழியின் ஆரம்பமானது, அங்குள்ள மிகப் பழமையான மொழிக் குடும்பமான சில்போ கொமேரோ மொழியின் ஒரு கிளை மொழியாகும். 'கொமேரியர்கள் விசில் அடிக்கின்றனர்' என்பதே அதன் பொருளாகும். இம்மொழி அத்தீவிற்கு வருவதற்கு முன்னர் அங்கு வாழ்ந்த குவன்ச்சே மக்களிடையே நன்கு பரிச்சயமாகப் பேசப்பட்டது. இப்பொழுது குவன்ச்சே மொழி முற்றாக அழிந்துவிட்டது. வட ஆபிரிக்காவிலிருந்து இத்தீவுகளுக்கு வந்து நிரந்தரமாகத் தங்கிவிட்ட மக்களுடனேயே குவன்ச்சே மொழி இப்பிரதேசத்திற்கு அறிமுகமாகியது. இப்பொழுது அம்மொழிச் சொற்களுக்குப் பதிலாக சில்போ மொழிக்கும் ஸ்பானிய மொழிச் சொற்களையே பயன்படுத்துகின்றனர்.

இந்த விசில் மொழி தொடர்புகளுக்காக உருவான மொழி என்றே இது குறித்து ஆய்வுசெய்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் கூறும் முக்கிய காரணம், அத்தீவில் இயற்கையாகவே அமைந்துள்ள நில அமைப்பே தவிர, வேறொன்றுமில்லை. கெனேரியா தீவுக்கூட்டங்களுக்குச் சொந்தமான இந்த லா கொமேரா தீவின் நில அமைப்பு, மலைகள், பள்ளத்தாக்கு, சமவெளி காரணமாக தூரத்தே உள்ள மலையொன்றில் வாழும் மக்கள் இன்னொரு மலையிலுள்ள மக்களுடனோ அல்லது தனிநபருடனோ பேசுவதற்கு இம்மொழியைப் பயன்படுத்தியிருக்கலாம் என்பதே அவர்களின் கருத்தாகும். இங்கு வாழும் மக்களின் வாழ்வாதாரம் விவசாயத்திலும் விலங்கு வேளாண்மையிலுமே தங்கியுள்ளது. இதனால், அத்தகையோருக்கு இம்மொழி மிகவும் பயனுள்ளதாகவும் இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.



விசில் மொழியாகிய சில்போ தொலைத்தொடர்புகளுக்கு பயன்படுத்தப்படுவதாகவே கருதப்படுகின்றது. லா கொமேரா தீவின் அமைவிடம், நில அமைப்பு, மலைகள், பள்ளத்தாக்குகள் நிறைந்திருப்பதாலேயே இக்கருத்து நிலவுகின்றது. இத்தகைய பூமியில் விசில் ஒலி இரண்டு மைல் தூரத்திற்கு கேட்கும்.



சில்போ மொழி இப்பொழுது பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றது.

இத்தீவுகளுக்கு இன்றுவரை கிடைத்துவரும் ஸ்பானிய நாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டுவிட்டால், இம்மொழியைப் பாதுகாப்பதற்காக செலவழிக்கும் தொகையை குறைக்க அல்லது நிறுத்தவேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலைக்கு அந்நாட்டு அரசு தள்ளப்படலாம். அப்பொழுது பாடசாலைகளில் இம்மொழியைக் கற்பிக்கும் செயற்றிட்டமும் நிறுத்தப்படலாம்.

மொழிகள் குறித்த ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கே மொழியின் பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் பற்றிய பயன் கிடைக்கின்றது. இம்மொழியின் ஆரம்பம் குறித்து எதுவும் வெளிவராத போதும் இதனை ஆய்வுசெய்வதன்மூலம் வேறு பல மொழிகளின் ஆரம்பம் குறித்தும் அதன் பரிமாண வளர்ச்சி குறித்தும் பல்வேறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**இரஞ்சித் ஜெயகர்**


## விஜய் உடன் Top News வழங்கும் வாரம் ஒரு iPod... வெல்லுங்கள்




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 11.09.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




14.08.2013 'Top News' கேள்விக்கான விடை:
887 சிலைகள்

ipod பரிசை பெறுபவர் :
எம்.யூ.எஃப்.ஃபஹிஹா,
யூடி 11 A/1, ஜலாலியா வீதி,
சம்மாந்துறை.

விஜய் – Top News

இவ்வார கூப்பன் (04.09.2013)

.......................................................

விடை: ....................................

பெயர்: ....................................

வீட்டு முகவரி: ....................................

.......................................................

பாடசாலை முகவரி: ....................................

.......................................................

வயது: ....................................

தொ.பே.இல: ....................................


அனுப்ப வேண்டிய முகவரி:

iPod பரிசுப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ை கிரேக்க முக்கிய தகவல்

கி.மு 800 ஆம் ஆண்டளவில் கிரேக்க நாகரிகத்தில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டது. இந்த வளர்ச்சியானது, பண்டைய உலகில் பல மாற்றங்களை ஏற்படுத்தியதுடன், இதர உலக நாடுகளிலும் அதன் தாக்கத்தை உணரக்கூடியதாக இருந்தது. கிரேக்க நாகரிகத்தில் அன்று நிகழ்ந்த பாரிய மாற்றங்கள், அதன் வளர்ச்சியில் தற்போதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பண்டைய கிரேக்கமானது, சுயாதீன நகர மற்றும் பல சிற்றரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த நகர அரசுகளில் தனித்தனியான ராசதானிகள் இருந்தன. இவற்றுள் மிகவும் முக்கியத்துவம் பெற்றதும் பலமானதுமான அரசுகளாக 'எதென்ஸ்' மற்றும் 'ஸ்பாட்டா' அரசுகள் இருந்தன.





## நகர அரசுகள்

பெரும்பாலான நகரங்களின் நிர்வாக நடவடிக்கைகளை செல்வந்த வம்சாதிபதி பிரபுக்களே மேற்கெண்டு வந்தனர். அவர்களை 'ஒலிகார்ச்சி' (Oligarchy) என்று அழைப்பர். இவர்களின் நிர்வாக செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்த இதர மக்கள், அவர்களுக்கு எதிராக குழப்பங்களையும் கிளர்ச்சி களையும் மேற்கொண்டனர். இந்த கிளர்ச்சிகளையும் குழப்பங்களையும் அடக்கவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் ஆட்சியாளர்கள் சர்வாதிகார ஆட்சிமுறையினைப் பின்பற்றினர்.

## ஆட்சி முறை

எவ்வாறாயினும், கி.மு. 508 இல் எதென்ஸில் புதிய அரசு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை 'டெமொக்ரட்டியா' (Demokratia) என்று அழைத்தனர். இன்று 'ஜனநாயகம்' என்ற சொல்லை நாம் பயன்படுத்துகின்றோம். இச்சொல்லானது, 'டிமொக்ரசி' (Democracy) என்ற சொல்லின் தழுவலாகும். அதாவது, 'ஜனநாயகம்' என்பது 'மக்களால் மக்களை ஆள்வது' என்று பொருள்படும். இதன்படி, நகரைச் சேர்ந்த ஆண்களுக்கும் ஆட்சிப்பணிகள் எவ்வாறு நடைபெற வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை கிடைத்தது. இன்று எமது நாட்டில் மட்டுமன்றி, உலகின் பல்வேறு நாடுகளிலும் ஜனநாயக அடிப்படையிலான ஆட்சியே நடைபெறுகின்றது.






பாரசீகர்களுக்கு எதிரான யுத்தமொன்று

## பொற்காலம்

கிரேக்க கலாசாரத்தின் பொற்காலமாக கி.மு 500 முதல் 336 வரையான காலப் பகுதி கருதப் படுகின்றது. இதனை 'க்ளசிக்கல் பீரியட்' (Classical Period) என்பர். இந்தக் காலப்பகுதியில் கிரேக்கம் இரு பெரும் யுத்தங்களில் ஈடுபட நேர்ந்தது. 'பேர்சியன் யுத்தம்' அதாவது பாரசீக யுத்தம் (கி.மு 490-449) மற்றும்'பிலோ பொனீசியன் யுத்தம்' (கி.மு 431-404) என்பன அந்த பெரும் யுத்தங்களாகும்.



கிரேக்க வீரன்

## ஆக்கிரமிப்பு

பாரசீகர்கள் கி.மு 490 இல் கிரேக்கத்தை ஆக்கிரமித்தபோது, இதர கிரேக்க நகர அரசுகள் ஒன்றிணைந்து பாரசீகர்களுக்கு எதிராக அணிதிரண்டு மிகவும் வெற்றிகரமாக அந்த ஆக்கிரமிப்பினை முறியடித்தனர்.

## யுத்தக் கப்பல்கள்

பாரசீக யுத்தத்தின் ஒரு கட்டமாக கி.மு. 480 இல் செலமீஸில் நிகழ்ந்த கடல்யுத்தம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. கிரேக்கப் படையினர் குறுகிய கடல்பகுதியில் பாரசீகர்களின் யுத்தக் கப்பல்கள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தி, அவர்களைத் தோற்கடித்தனர்.

இதன்போது பாரசீக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கப்பல்களில் மோதி அவற்றை மூழ்கடிக்கவும் தகர்க்கவும் கிரேக்கக் கப்பல்களால் இயலுமாக இருந்தது. அந்தளவுக்கு அவை பலம்பெற்றிருந் தன. மூழ்கிக் கொண்டிருந்த கப்பல்களில் இருந் தவர்கள்மீது கிரேக்க வில்வீரர்கள் அம்பு எய்தி தாக்குதலை நடத்தினர்.

## வீரர்கள்

கிரேக்க யுத்தப்படையில் பெரும் சேவையாற்றியவர்க ளாக கிரேக்க காலாட்படையின ரைக் குறிப்பிட முடியும். இவர்கள் இரும்பாலான கவசங்களை அணிந்திருந்தனர். கழுத்து முதல் முழங்கால்வரை யான கவசங்களாக அவை இருந் தன. எதிராளிகள் மீது தாக்குதல் நடத்தவென ஈட்டி போன்ற கூரிய ஆயுதம் ஒன்றை அவர்கள் எப்பொழுதும் உடன் வைத்தி ருந்தனர். அவர்கள் சிறிய பாவாடை போன்ற டியுனிக் ஆடையை அணிந்திருந்தனர். துரிதகதியில் சமரில் ஈடுபட இவை அவர்களுக்கு உதவின.

## கடவுள்களும் தேவதைகளும்

கிரேக்கக் கடவுள்களின் தந்தை யாக ‘சியுஸ்’ என்ற கடவுள் கருதப்படுகின்றார். இவர் பல கடவுள்கள் சூழ இருப்பவர். கிரேக்கர்கள் பல




கடவுள்களை வணங்கினர். இவர்களில் ஒலிம்பஸ் மலையில் வாழ்ந்த கடவுள்கள் சிறப்புவாய்ந் தவர்களாக இருந்தனர். ஒலிம்பஸ் மலையானது, கிரேக்கத்தின் மிகவும் உயரமான மலையாகும்.

## மரதன் யுத்தமும் போட்டியும்

‘மரதன் யுத்தம்’ (Battle of Marathon) என்பது பாரசீக-கிரேக்க யுத்தத்தில் மிகவும் பிரபல்யம் பெற்ற ஒரு யுத்தமா கும். இந்த யுத்தம் கி.மு. 490 இல் நிகழ்ந்தது. பிடிபிடிஸ் (Pheidippides) என்ற கிரேக்க வீரன், 40 கி.மீற்றர் தூரம் தடை யின்றி ஓடி, எதென்ஸ் நகருக் குள் பிரவேசித்து கிரேக்கப் படை யினர் பாரசீகர்களைத் தோற்க டித்துவிட்ட செய்தியைத் தெரி வித்தான். இந்த சம்பவத்தினை அடிப்படையாக வைத்தே ‘மரதன் போட்டி’ உருவானது.

## எதென்ஸும் ஸ்பாட்டாவும்

பாரசீகப் படைகளைத் தோற் கடித்ததனூடாக, கிரேக்கம் பெற்ற வெற்றியானது, நீண்டகாலம் நிலைத்திருக்கவில்லை. எதென் ஸுக்கும் ஸ்பாட்டாவுக்கும் இடையிலான சுமுகநிலை, மெல்ல மெல்ல முறுகல் நிலையை அடைந்து கி.மு. 431 இல் அவர்களுக்கு இடையே யுத்தம் மூண்டது. ‘பிலோபொனீசியன் யுத்தம்’ என்று கூறப்படும் இந்த யுத்தம், சுமார் 27 ஆண்டுகள் நடைபெற்றதுடன், நாட்டைப் பிளவுபடுத்தியதை அடுத்தே, இந்த யுத்தம் முடிவுற்றது.

ஸ்பாட்டாக்கள் எதென்ஸ் நகரை சுற்றிவளைத்த பின்னர் கி.மு 404 இல் எதென்ஸ் அவர்களுக்கு அடி பணிந்தது. இந்த தோல்வியின் பின்னர் எதென்ஸ் நகர மக்க ளால் மீண்டும் எழுச்சி பெற முடியவில்லை.

## ஸ்பாட்டா

ஸ்பாட்டாவின் வாழ்க்கை முறை எதென்ஸைவிட முற்றி லும் மாறுபட்டதாக அமைந்திருந்தது. ஸ்பாட்டாக்கள் எப்பொழுதும் நகர மக்களை யுத்தப் பயிற்சிகளில் ஈடுபடுத்தி னர். இதனால், அவர்கள் எதற்கும் அஞ்சாத போர் வீரர்களாக மாறி னர். வெளிநாட்டு ஆக்கிரமிப்பு களில் இருந்து நகரைக் காப்பாற் றுவதே அவர்களின் போர்ப் பயிற்சியின் நோக்கமாகும். ஸ்பாட்டா நகரில் அனைத்து ஆண்களுக்கும் யுத்தப் பயிற்சி அளிக்கப்பட்டது. 7 வயதை அடைந்த சிறு ஆண் பிள்ளை களும்கூட, யுத்தப் பயிற்சிகளுக் காக அனுப்பப்பட்டனர். கிரேக் கத்தின் திறன்வாய்ந்த-



மட்பாண்டங்கள்

பலம்வாய்ந்த போர் வீரர்களாக அவர்களை மாற்றுவதே இதன் நோக்கமாக இருந்தது. விளை யாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட பெண் பிள்ளை களுக்கு அனுமதி வழங் கப்பட்டது. இதனால், பெண்களும் ஆரோக்கி யமாக வளர்ந்தனர். இவ்வாறான செயற்பா டுகள் கிரேக்கத்தின் வேறு நகரங்களிலும் இடம்பெற்றன.




## அதீனாவின் ஆலயம்

எதென்ஸ் நகரின் உயர்வான மலைப்பகுதியில் அமைக்கப் பட்ட அக்ரோபொலிஸ் நகரத்தில் கி.மு 5 ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட பார்த்தினன் தேவாலயம் மிகவும் அழகானது. யுத்தத்திற்கும் வாக்குறுதிக்கும் உரிய கடவுளான அதீனாவுக்காக இந்த தேவாலயம் கட்டப்பட் டது. இதனைத் தவிர மேலும் பல தேவாலயங்கள் இங்கு கட்டப்பட்டதுடன், அவற்றில் பூஜைகளும் நடத்தப்பட்டன.



எதென்ஸ் நகர அதீனா தேவாலயம்



யுத்தக் கப்பல்

## பெரிக்லீஸ்

கி.மு. 443 முதல் 429 வரையான காலப்பகுதியில் எதென்ஸ் நகரின் ஆட்சியாளராக பெரிக்லீஸ் (பெரிக்ள்ஸ்) இருந்தார். கி.மு. 479 முதல் 431 வரை நிலவிய பொற்காலத்தில் பிரபல்யம் பெற்ற ஆட்சியா ளராகத் திகழ்ந்த அவர், மக்க ளின் நன்மதிப்பைப் பெற்ற வராகவும் விருப்பத்திற்குரிய வராகவும் விளங்கினார்.

செலமிஸ்ஸில் பாரசீகர் களைத் தோற்கடித்த காலப் பகுதியே இவரது ஆட்சிக் காலத்தில் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. பாரசீகர் களின் தாக்குதலினால் பாதிப்படைந்த எதென்ஸ் நகரை, மீளக் கட்டியெழுப் பிய பெருமை பெரிக்லீஸையே சாரும். பார்த்தினன் தேவாலயமும் அவரின் ஆணையின் பேரிலேயே கட்டியெழுப் பப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் (தரம் - 4)

பெயர்: ..........................................................

### 01) பின்வரும் வினாக்களுக்கு உரிய விடையின்கீழ்க் கீறிடுக.

01. வீதிகளில் காணப்படும் சமிக்ஞை விளக்குகளில் பச்சை நிறம் எரியும்போது;
   1. செல்லலாம் 2. நிறுத்தவும் 3. ஆயத்தமாகுக 4. நிறுத்தத் தடை
02. மிக விரைவில் முளைக்கும் வித்து;
   1. பூசணி 2. வெண்டி 3. கடுகு 4. கத்தரி
03. மலேரியா காய்ச்சலைப் பரப்பும் உயிரினம் எது?
   1. ஈ 2. நுளம்பு 3. கரைப்பான் 4. எலி
04. முட்டை வடிவான இலையைக்கொண்ட தாவரம் எது?
   1. பலா 2. தாமரை 3. அடம்பன் 4. வல்லாரை
05. இலைகளைக் கசக்கி முகர்வதன்மூலம் இனம்காணக்கூடிய தாவரம் எது?
   1. புல் 2. செவ்வரத்தை 3. எலுமிச்சை 4. ரோஜா
06. எண்ணெய் எடுக்கப் பயன்படும் தாவரம்;
   1. கறுவா 2. செவ்வரத்தை 3. ரோஜா 4. தூதுவளை
07. நாருரு வேரைக்கொண்ட தாவரம்;
   1. புல் 2. துளசி 3. குப்பைமேனி 4. வேம்பு
08. பின்வருவனவற்றுள் செல்லப்பிராணி எது?
   1. பசு 2. நாய் 3. கோழி 4. வாத்து
09. 'பாலைவனக்கப்பல்' என அழைக்கப்படும் பிராணி எது?
   1. ஒட்டகம் 2. குதிரை 3. யானை 4. கழுதை
10. மை கறையைப் போக்கப் பயன்படுத்துவது;
   1. எண்ணெய் 2. அசற்றோன் 3. பெற்றோல் 4. நீர்

### 02) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

01. பச்சையாக உண்ணக்கூடிய கீரை வகைகளை உப்பு நீரில் கழுவவேண்டும். (......)
02. வகுப்பறையிலுள்ள அநேகமான பொருட்கள் மரத்தால் ஆனவை. (......)
03. தினமும் தலையணை, போர்வை என்பவற்றை வெயிலில் உலர்த்த வேண்டும். (......)
04. பொலிதீன் விரைவாக உக்குவதற்கு மண் உதவுகின்றது. (......)
05. இலங்கை அரசாங்கம் மாணவர்களுக்கு இலவசமாக சிற்றுண்டி வழங்குகிறது. (......)

### 03) பொருத்தமானவற்றை இணைக்க.

| | |
|---|---|
| 01. உக்கிப்போகாத பொருள் | 01. இலை குழை |
| 02. நற்பழக்கவழக்கம் | 02. ப்ளாஸ்டிக் |
| 03. உக்கிப்போகக்கூடியது | 03. குப்பைக்கூடை |
| 04. குப்பைகளை இடுதல் | 04. சுத்தமான ஆடையணிதல் |
| 05. பாடசாலை வரலாறு | 05. கல்வெட்டு |




### 04) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

01. சமையலுக்கு சுவையூட்டப் பயன்படுவது; ..........
02. நுளம்பினால் பரவும் நோய்கள் எவை? ..........
03. உலோகங்கள் சில தருக. ..........
04. பச்சையாக உண்ணக்கூடிய காய்கறிகள்; ..........
05. நோய்களைப் பரப்புபவை; ..........
06. மாணவர்களின் நற்பழக்கங்களைக் குறிப்பிடுக. ..........
07. நிறையுணவுகள் எவை? ..........
08. எண்ணெய் பெறக்கூடிய தாவரங்கள் எவை? ..........
09. ஒரு வித்தைக்கொண்ட தாவரங்கள் எவை? ..........
10. மூலிகைத் தாவரங்கள் சில தருக. ..........
11. கடதாசி தயாரிக்கப் பயன்படும் தாவர வகை எது? ..........
12. ஆணிவேரைக்கொண்ட தாவரங்கள் எவை? ..........
13. வீட்டு ஈயினால் பரவும் நோய்கள் எவை? ..........
14. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவுகள் 2 தருக. ..........
15. பழுதடைந்த உணவின் இயல்புகள் எவை? ..........

### விடைகள்


**01)** *01. 1 02. 3 03. 2 04. 1 05. 3 06. 1 07. 1 08. 2 09. 1 10. 2*

**02)** *01) சரி 02) சரி 03) சரி 04) பிழை 05) பிழை*

**03)** *01. ப்ளாஸ்டிக் 02. சுத்தமான ஆடையணிதல் 03. இலை குழை 04. குப்பைக்கூடை 05. கல்வெட்டு*

**04)**
*01. சீனி/உப்பு/கொத்தமல்லி/கறிவேப்பிலை/மிளகாய்த்தூள்*
*02. மலேரியா, டெங்கு, பைலேரியா*
*03. தங்கம்/ வெள்ளி/ செப்பு/ அலுமினியம்*
*04. தக்காளி, வெண்டி, கெரட், வெள்ளரி*
*05. நுளம்பு, ஈ, எலி*
*06. தினமும் குளித்தல், தூய ஆடைகளை அணிதல், பெரியோரை கனம்பண்ணுதல்*
*07. பால், முட்டை*
*08. கடுகு, கறுவா, வேம்பு*
*09. மா, ஆனைக்கொய்யா*
*10. வேம்பு, வெற்றிலை, கொத்தமல்லி, துளசி, கற்பூரவள்ளி*
*11. மூங்கில், நெல், யூக்கலிப்டஸ்*
*12. மா, புளி, வேம்பு, பலா*
*13. வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி*
*14. இறைச்சி, மீன், முட்டை, பால்*
*15. மணம் வீசும், நிறம் மாறியிருக்கும், பூஞ்சணம் பிடித்திருக்கும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செவ்வாய் செல்லவுள்ள 'மாவென்' விண்கலம்

செவ்வாய் கிரகத்தின் மேல் வளிமண்டலத்தை ஆராய்ச்சி செய்வதற்கென புதிய விண்கலம் ஒன்றை செவ்வாய் நோக்கி அனுப்புவதற்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'மாவென்' (MAVEN - Mars Atmosphere and Volatiles Evolution) எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த விண்கலம், இவ்வாண்டு நவம்பர் 18 முதல் டிசம்பர் 7 வரையான காலப்பகுதியில் ஃப்ளோரிடாவின் கேனவரல் முனை ஏவுதளத்தில் இருந்து Atlas V-401 ரொக்கெட் மூலம் ஏவப்பட இருப்பதாக நாஸா அறிவித்துள்ளது.

வளிமண்டலத்தில் உள்ள வளிமத்தின் இழப்பானது, எவ்வாறு செவ்வாய் கிரகத்தின் காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறிவதே இதன் முக்கிய நோக்கம் ஆகும். இதன்மூலம் முன்னர் அறிந்திராத பல தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும் என விஞ்ஞானிகள் நம்புவதாக நாஸா தெரிவித்துள்ளது.

மாவென் விண்கலம் 2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் செவ்வாயின் சுற்றுப்பாதையை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# விண்கற்களின் தாக்குதலில் இருந்து பூமியைப் பாதுகாக்க 402 யோசனைகள்

நாம் வாழும் பூமியை விண்கற்களின் தாக்குதலுக்கு உள்ளாகாமல் பாதுகாக்கும்பொருட்டு, எடுக்கக்கூடிய திட்டங்கள் பற்றி அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸாவிடம் 402 யோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

விண்வெளியில் ஏராளமான விண்கற்கள் வலம்வருகின்றன. அவை பூமிக்குப் பெரும் சவாலாகவே இருக்கின்றன. சிலவேளைகளில் அவற்றில் சில, வளிமண்டலத்திற்குள் நுழைந்தும் விடுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களிலேயே



குறித்த விண்கற்களால் பூமிக்கு ஆபத்துக்கள் நேர்கின்றன. ஆக, இத்தகைய ஆபத்தான நிலைமைகளில் இருந்து பூமியைப் பாதுகாக்கும்பொருட்டே, நாஸாவிடம் இந்த 402 விதமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவற்றில் ரொபோக்களை விண்வெளிக்கு அனுப்பி, பூமியின் அருகே சுற்றித்திரியும் சிறிய விண்கற்களை வேறு இடத்தில் நகர்த்தி வைக்கும் எதிர்காலத் திட்டம் பற்றிய யோசனையும் உள்ளது. அத்துடன், பூமிக்கு அருகே உள்ள விண்கற்கள் பூமியை மோதாமல் தடுக்கவும் இதுவரை கண்டறியப்படாத பூமிக்கு அருகே உள்ள சிறிய, ஆபத்தான விண்கற்களின் இருப்பிடத்தைக் கண்டறியப் பயன்படும் விதத்திலான யோசனைகளும் அடங்கியுள்ளதாக நாஸா தெரிவித்துள்ளது.

# நாகரிகமான பழக்கவழக்கங்கள் மாணவர்களுக்கு அவசியம்




மாணவர்களுக்கு கல்வி எந்தளவுக்கு அவசியமோ, அதேபோன்று சிறந்த பழக்கவழக்கங்களும் அவசியம். அவர்கள் எங்கு சென்றாலும் கல்வியின் தேவை ஏற்படுவதைப் போன்றே, ஒழுக்கத்தின் தேவையும் அவ்சியமாகின்றது.

மாணவர்களைப் பொறுத்தவரையில், பண்பும் நாகரிகமும் கட்டாய தேவைப்பாடாகும். தன்நலம், பிறர் நலம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால், நாகரிகம் என்பது தானாக வரும். அத்துடன், நாம் எங்கு சென்றாலும் நம்மை எல்லோரும் அவதானித்துக்கொண்டிருக்கின்றனர் என்ற எண்ணத்துடன் செயற்பட வேண்டும்.

நாகரிகம் என்பது குறித்து அநேகமான மாணவர்கள்







தவறான புரிந்துணர்வையே கொண்டுள்ளனர். நாகரிகம் என்பது ஆடைகளிலோ, பணத்திலோ, அழகிலோ தங்கியிருப்பதொன்றன்று. மாறாக, அது ஒழுக்கத்தையும் பண்பையும் கட்டியெழுப்பக்கூடியதாகவும் பிரதிபலிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அநேகமாக, பொது இடங்களில் இருக்கும்பொழுதே நாகரிக விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். பிறரது ரகசியம், தனிப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தமான விடயங்களில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். பிறரோடு சாப்பிடும் போதும் பேசும்போதும் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும்.

கல்வி, தொழில், குடும்பம் என்ற ரீதியில் எங்கு சென்றாலும், என்ன செய்தாலும் நாகரிகம் என்பது கட்டாயம் தேவைப்படுகின்றது. பிறரிடம் மன்னிப்புக் கேட்டல், நன்றி தெரிவித்தல், வாழ்த்துத் தெரிவித்தல் போன்ற பழக்கங்களை பழகிக்










கொள்ள வேண்டும். பிறரது நேரத்தை, வீண் விரயம் செய்யவும்கூடாது. பிறருக்கு வருத்தம், அசௌகரியம் ஏற்படும் வகையில் நாம் நடந்துகொள்ளவும் கூடாது. எங்கு சென்றாலும் அமைதி, அடக்கம், பணிவு என்பன அவசியம்.

ஆகவே, நாகரிகமான பழக்கவழக்கங்களை ஒவ்வொரு மாணவரும் பாடசாலைப் பருவத்திலிருந்தே கற்றுக்கொள்வது மிகவும் அவசியமானதொன்றாகும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்திறன் என்பது, ஹோவர்ட் கார்ட்னரது மக்களின் பல்வேறு தனித்திறன்களைப் பற்றிக் கூறும் மனோதத்துவக் கொள்கையின் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு மனிதனிடமும் ஏழு வகையான தனித்திறன்கள் உள்ளன. சிலர் ஒன்று அல்லது இரண்டு தனித் திறன்களில் சிறந்து விளங்குவர். மேலும் சிலர் அனைத்துத் திறன்களையும் சமவிகிதத்தில்



# மாணவர்களின் பல்திறன் கொள்கை



பெற்றிருப்பர்.

ஹோவர்ட் கார்ட்னர், மாணவர்கள் கல்வி கற்கும் முறையின்கீழ் ஏழு தனித்திறன்களைப் பட்டியலிட்டுள்ளார். முதல் இரண்டு திறன்கள் பாடசாலைகளில் கண்டறியப்படுகின்றன. அடுத்த மூன்றும் கலைகளுடன் தொடர்புடையவை. இறுதி இரண்டு திறன்களும் தனிமனிதத் திறன்கள் என்று ஹோவர்ட் குறிப்பிடுகிறார்.



## பல்திறன்களின் வகைகள்

காட்சி - இடம் சார்ந்த திறன்
சொல் - வாய்மொழித்திறன்
கணிதம் - தர்க்கவியல் சார்ந்த திறன்
உடல் - உடல் சார்ந்த உடலசைவுத் திறன்
இசை - சாந்தம் சார்ந்த திறன்

## பிறருடன் இணைந்து செயற்படும் திறன்

இது அடுத்தவர்களைப் பற்றிப் புரிந்துகொள்ளும் திறனாகும். பிறர் ஒரு விடயத்தைப்பற்றி என்ன எண்ணுகின்றனர் என்பதை அறிய, அதனை அடுத்தவர் கண்ணோட்டத்தில் இருந்து பார்ப்பர். இவர்கள் பிறரின் எண்ணங்களையும் நோக்கங்களையும் எளிதில் அறியும் அபார ஆற்றல் கொண்டவர்கள். குழுக்களில் அமைதியையும் ஒற்றுமையையும் பேணுவர்.

(தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5320
டீ.ஸ்ரார் பிறைற்ரன், சுன்னாகம் மத்தி., சுன்னாகம்.


அங். இல: 5321
எஃப்.ரிசாபா, எலுவிலை, பாணந்துறை.


அங். இல: 5322
பாத்திமா றம்லா, வத்தல்பொல, பாணந்துறை.


அங். இல: 5323
ஹக்கில் அஹ்மத், பட்டானிச்சி, வவுனியா.


அங். இல: 5324
சி.பிரவீனா, உருத்திரபுரம், கிளிநொச்சி.


அங். இல: 5325
ஆர்.லிஸ்டன், கிங்கோரா தோட்டம், சாமிமலை.


அங். இல:5326
இஸ்ஸத் முன்ஸிஃப், ஊர் வீதி, காத்தான்குடி-03.


அங். இல: 5327
எஸ்.முகிலன், நில்லம்பை, கலஹா.


அங். இல: 5328
எஃப்.ஸஃப்ரா, கல்பிட்டிய வீதி, நுரைச்சோலை.


அங். இல: 5329
கே.சிது, மவுன்ட்ஜீன் தோட்டம், வட்டவளை.


அங். இல: 5330
சி.கிருபரன், உவர்மலை, திருகோணமலை.


அங். இல: 5331
எம்.ஸஃப்ராஸ், ரம்புக்கந்தான, ரிதீகம.

# தெரிந்து கொள்வோம்



✱ அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம் வெள்ளை மாளிகை ஆகும். இதற்கு வெள்ளை மாளிகை என பெயர் வரக்காரணம் என்ன?

பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற நடத்திய போராட்டத்தின்போது, இந்த மாளிகைக்கு தீ வைக்கப்பட்டதனால், இக்கட்டடம் கறுப்பு நிறத்தை அடைந்தது. சுதந்திரத்தின் பின்னர் மாளிகை முழுவதும் வெள்ளை நிறம் பூசப்பட்டு வெள்ளை மாளிகை (White House) என்று அழைக்கப்படுகின்றது.

✱ இலங்கையில் உருவாகிய முதல் அரசியல் கட்சி எது?

லங்கா சமசமாஜக் கட்சி




✱ பாகிஸ்தானிய மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதமர் ஒருவரை பாகிஸ்தானிய இராணுவம் தூக்கிலிட்டது. தூக்கிலிடப்பட்ட பிரதமர் யார்?

சுல்ஃபிகார் அலி பூட்டோ

✱ உளவியலின் தந்தை யார்?

சிக்மன்ட் ஃப்ரைட்



✱ நீரில் மிதக்கும் உலோகங்கள் எவை?

சோடியம், பொட்டாசியம், லிதியம்



✱ 5,000 ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் பாரிய விண்கல் ஒன்று மோதியமையால், மிகப்பெரிய பள்ளம் ஒன்று ஏற்பட்டது. இந்நிகழ்வு எங்கே நிகழ்ந்தது? அந்தப் பள்ளம் எது?

ஐக்கிய அமெரிக்காவின் அரிசோனா பள்ளத்தாக்கு

✱ 'வெள்ளைப் பிரம்பு தினம்' எப்போது, எதற்காக நினைவுகூரப்படுகின்றது?

ஒக்டோபர்-15. விழிப்புலனற்றோருக்கு உதவும் நோக்கில், ஐ.நா. பிரகடனப்படுத்தியுள்ள தினமாகும்.

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**


# விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) | |
|---|---|---|---|
| 6 மாதத்திற்கு | ரூபா 390/= | 6 மாதத்திற்கு | ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு | ரூபா 780/= | 1 வருடத்திற்கு | ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர்:- ..........................................
..........................................
முகவரி:- ..........................................
..........................................
தொ.பேசி:- ..........................................
பத்திரிகையின் பெயர்:- ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..........................................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,
Wijeya Newspapers Ltd.,
8, Hunupitiya Cross Road, Colombo-02**



Dialog தொலைபேசியில் ஆங்கிலம் மூலம் SMS ஊடாக

✱ தினமும் அரச மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்புகள், IT Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்)

✱ ஆங்கில Proverb, Idiom மற்றும் Quote களை தினமும் பெறலாம்.

✱ முக்கிய செய்திகள், பொது அறிவு, புதிய கண்டுபிடிப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்க்கும் இணையத்தளங்கள் சில...

சிறுவர்களின் அறிவை வளர்ப்பதற்காகவே தற்போது பல இணையத்தளங்கள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

**kidsmart:** லண்டனிலிருந்து செயல்படும் இந்த இணையத்தளம், சிறுவர்களுக்கு இணையம் தொடர்பான பல்வேறு விடயங்களைக் கற்றுத் தருகின்றது. Chatting, Social Network தளங்கள், இணைய பாதுகாப்பு என்று இன்னும் ஏராளமான விடயங்களை இந்தத் தளம் சொல்லித் தரும். இதன் முகவரி: http://www.kidsmart.org.uk/




**nationalgeographic kids:** அறிவியல், கல்வி அமைப்பான The National Geographic Society, சிறுவர்களுக்காக நடத்தும் தளம் இது. அறிவியல், உயிரினங்கள் போன்ற பல விடயங்களை சிறுவர்கள் இத்தளத்தின்மூலம் கற்றுக் கொள்ளலாம். இதன் முகவரி: http://kids.nationalgeographic.com/kids/




**busybeekidscrafts:** சிறுவர்களுக்கு கைவினைப் பொருட்கள், பயிற்சிகள் செய்யக் கற்றுத் தரும் தளம். இதன் முகவரி: http://www.busybeekidscrafts.com/




**kidshealth:** மருத்துவம், சுகாதாரம் பற்றி சிறுவர்களுக்கு சொல்லித் தரும் தளம். இதன் முகவரி: http://kidshealth.org/kid/







**nasa kidsclub:** அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸாவினால், சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள தளம். இதன் முகவரி: http://www.nasa.gov/audience/forkids/kidsclub/flash/

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விஜய் நுட்பம்

எஸ்.பிரதீப்

2013, செப்டெம்பர், 04, புதன்கிழமை

# Canon இன் புதிய அறிமுகம்: 'VIXIA mini' வீடியோ கெமரா



இலத்திரனியல் சாதன உற்பத்தியில் தனக்கென ஓர் இடத்தைத் தக்கவைத்திருக்கும் Canon நிறுவனம், Wi-Fi தொழில்நுட்பத்துடன்கூடிய வீடியோ கெமரா ஒன்றினை அறிமுகப்படுத்துகின்றது. 'VIXIA mini' எனும் பெயருடன் அறிமுகமாகும் இச்சாதனமானது, 3x 0.9 x 3.8 அங்குல அளவுப் பரிமாணத்தை உடையதாகும். 12.8 மெகாபிக்சல்களைக் கொண்ட இக்கெமராவில், 2.8 அங்குல அளவுடைய LCD திரையும் பொருத்தப்பட்டுள்ளமை அதன் சிறப்பாகும். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள 760m Ah மின்கலத்தின் உதவியுடன் தொடர்ச்சியாக 45 நிமிடங்கள் வீடியோப் பதிவு மேற்கொள்ளமுடியும். இக்கெமராவின் அறிமுக விலை 299.99 அமெரிக்க டொலர்களாகும்.





**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.

இங்கே மடிக்கவும்

இங்கே வெட்டவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Apple இன் புதிய iPhone வெளியீடு




Apple நிறுவனத்தின் புதிய தயாரிப்புகள் தொடர்பாக எதிர்பார்ப்புகள் இருப்பது வழமையாகும். இதன்படி, இம்மாதம் 10 ஆம் திகதியளவில் இடம்பெறவுள்ள Apple நிறுவனத்தின் உத்தியோகபூர்வ நிகழ்வுமூலம் புதிய iPhone பற்றி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Apple இன் புதிய தயாரிப்புகள் குறித்து வழமைபோன்று தாராளமான வதந்திகள் உலாவருகின்றன. இதேவேளை, Wall Street Journal உடன் தொடர்புபட்டு இயங்குகின்ற தொழில்நுட்பத் தகவல்களை வழங்கிவரும் இணையத்தளமொன்று இது தொடர்பான




எதிர்பார்ப்புகளை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, புதிய iPhone ஆனது 'iPhone 6' அல்லது 'iPhone 5s' என்று அழைக்கப்படலாம் என்றும் Apple நிறுவனத்தின் புதிய வடிவமைப்பு மாற்றங்களை உள்ளடக்கிய iOS 7 இயங்குதளத்தினை உள்ளடக்கியே, புதிய iPhone வெளியிடப் படலாம் எனவும் எதிர்பார்க்கப்படு கின்றது.

அத்துடன், இது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட முடியாத மேலும் பல தகவல்களும் வெளியாகியுள்ளன. அவற்றிற்கமைய, Apple நிறுவனமானது, ஒப்பீட்டளவில் விலை குறைந்த iPhone தயாரிப்புகளை அறிமுகம் செய்யலாம் எனவும் குறித்த தயாரிப்புகள் Phone 5c எனும்




பெயரிட்டு அழைக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், புதிய iPhone ஆனது சந்தையில் ஏற்கனவேயுள்ள போட்டியாளர்களைச் சமாளிக்கும் பொருட்டு பெரிய திரைகளைக்கொண்டு வடிவமைக்கப்படலாம் எனவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக Finger Print Scanner களைக் கொண்டிருக்கலாம் எனவும் சில தகவல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

எவ்வாறாயினும், இம்மாதம் ஒழுங்குசெய் யப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்ற Apple நிறுவனத்தின் உத்தியோகபூர்வ நிகழ்விலேயே இந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பது உறுதி.



# இணையப் பணக் கொடுக்கல்-வாங்கல் சேவையில் கால்பதிக்கிறது facebook



பல மில்லியன் பயனர்களைத் தன்னகத்தே கட்டிப்போட்டிருக்கும் Facebook சமூகவலைத் தளமானது, விளம்பர சேவைகளையும் வழங்கிவருகின்றது என்பது நீங்கள் அறிந்ததே!

இதனால், பணக் கொடுக்கல்-வாங்கல்களையும் தானே மேற்கொள்ளும் வகையில் புதியதொரு சேவையை ஆரம்பிக்கும் முயற்சியில் Facebook தற்போது ஈடுபட்டுள்ளது.

இணையம் மூலமான பணக் கொடுக்கல்-வாங்கல்களுக்குத் தற்போது பிரபலமானதாகக் காணப்படும் Paypal நிறுவனத்தின் சேவைக்கு நிகராக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், மொபைல் சாதனங்களிலும்







இச்சேவையைப் பயன்படுத்தக்கூடிய வசதி கிடைக்கப்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், Facebook இலேயே தகவல் பாதுகாப்புக் குறித்த அச்சம் பயனர்களிடையே நிலவும் நிலையில், Facebook இல் பணக் கொடுக்கல்-வாங்கல் நடவடிக்கையை அதன் பயனர்கள் எந்த அளவுக்கு நம்பிக்கையோடு பயன்படுத்த முன்வருவார்கள் என்ற கேள்வியும் இங்கு எழாமலில்லை!






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# USB 3.0 விலும் இரண்டு மடங்கு வேகத்தில் தகவல் பரிமாற வருகிறது USB 3.1



தற்போது கணினியை அடிப்படையாகக்கொண்டு செயற்படுத்தப்படும் அனைத்துச் சாதனங்களும் USB இணைப்பானைக்கொண்டே பொருத்தப்படுகின்றன. சீரியல் போர்ட்கள் விடைபெற்றுச் செல்வதை அடுத்து, கணினிச் சாதனங்கள் மட்டுமல்லாமல், பல்வேறு இலத்திரனியல் சாதனங்களின் இணைப்புக்களும் தற்போது USB க்கு மாறிவருவதையும் நாம் காண்கிறோம்.

தற்போது பாவனையில் இருப்பவை USB 2.0, USB 3.0 போன்ற இணைப்பான்கள் என்பது நீங்கள் அறிந்ததே! இந்நிலையில், 10Gbps வேகத்தில் தரவுப் பரிமாற்றத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் USB 3.1 இணைப்பானை ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர். மிக விரைவில் சந்தைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த இணைப்பான் ஆனது, தற்போது உள்ளவற்றைவிடவும் 2 மடங்கு வேகத்தில் தரவுப் பரிமாற்றம் செய்யவல்லது என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே USB 2.0 வை விடவும் USB 3.0 வின் வேகமானது, அதீத மானது என்பதைப் பயனாளர்கள் உணர்ந் திருப்பீர்கள். ஆனால், இதனைவிடவும் இரண்டு மடங்கு வேகத்தில் புதிய USB 3.1 தகவல் பரிமாறப்போகிறது என்பது நிச்சயம் பயனுள்ள விடயம்தான்!

# LG அறிமுகப்படுத்தும் Mobile Printer



நவீன உலகில் தொழில்நுட்ப ரீதியில் நாளாந்தம் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. அந்த வரிசையில் புதிய Mobile Printer ஒன்றை LG அறிமுகப் படுத்தி யுள்ளது.




இதுவொரு கலர் பிரிண்டர் ஆகும். இதை அழகாக மடித்து கையில் எடுத்துக்கொள்ளலாம். தேவையான இடங்களுக்கும் எடுத்தும் செல்லலாம். இந்த Mobile Printer ஆனது, வயர்லெஸ் இணைப்பை வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி tablets, iOS Smartphones, கையடக்க Android சாதனங்கள் போன்றவற்றிலுள்ள படங்கள், ஆவணங்களைப் பிரதி (Print) எடுத்துக்கொள்ளலாம்.






# GALAXY S4 இன் செயற்றிறனில் வாடிக்கையாளர்கள் சந்தேகம்




Samsung நிறுவனத்தின் அண்மைய வெளியீடான Galaxy S4 கையடக்கத் தொலைபேசியானது, உலக சந்தைகளில் விற்பனையில் முன்னணி வகித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில், Galaxy S4 இன் செயற்றிறன் குறித்து சில சர்ச்சைகளும் கிளம்பியுள்ளன.

Galaxy S4 இல் காணப்படுகின்ற GPU (Graphic Processing Unit) இனுடைய செயற்றிறன் தொடர்பிலேயே பெரும்பாலும் சர்ச்சைகள் எழுந்துள்ளன. Galaxy S4 இல் காணப்படும் GPU ஆனது, பரிசோதிப்பு மென்பொருட்களில் அதிகளவு செயற்றிறனைக் காட்டுகின்றபோதிலும், பயன்பாட்டில் அது அந்தளவுக்கு வல்லமையுடன் செயற்படுவதில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, விளையாட்டுக்களின்போது, குறைந்தளவிலான செயற்றிறனிலேயே GPU இயங்குவதாக அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதனையிட்டு Galaxy S4 இல் பயன்படுத்தப்படுகின்ற Samsung இன் தயாரிப்பான Exynos 5 Octa chip கள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளபோதும், Qualcomm தயாரிப்பான chip களை உள்ளடக்கிய Galaxy S4 கள் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.


எனினும், குறித்த குற்றச்சாட்டினை மறுத்துள்ள Samsung நிறுவனமானது, விசேட உள்நோக்கங்கள் எதனையும் அடிப்படையாகக் கொண்டு குறித்த GPU கள் வடிவமைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது. விளையாட்டுக்களைப் பயன்படுத்தும்போது, அவை தொலைபேசியின் இயக்கத்திற்கு மிதமிஞ்சிய இடையூறுகளை ஏற்படுத்தாத வண்ணமே குறித்த GPU கள் அவ்வாறு செயற்படுகின்றன எனவும் உயர்ந்த graphics தேவைகளையுடைய Camera, Video Player மற்றும் Gallery ஆகியவற்றினைப் பொறுத்தவரையில் GPU கள் அதன் செயற்றிறனை உச்ச அளவில் பயன்படுத்துவதாகவும் Samsung தெரிவித்துள்ளது.



Samsung இன் இந்த அறிவிப்பு பாவனையாளர்களைத் திருப்திப்படுத்துமா? என்பதை இனிவரும் நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
JAFFNA

# Gmail சேவையில் தனி நபர் தகவல் பரிமாற்றங்கள் அம்பலமாகின்றனவா?




Google நிறுவனத்தின் பிரபல சேவையான Gmail ஆனது, பல மில்லியன் கணக்கான பாவனையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சேவையில் காணப்படுகின்ற மேலதிக வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் காரணமாகவே அதிகளவானோர் இச்சேவையினைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தநிலையில், Gmail சேவையின் ரகசியத்தன்மை குறித்து வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

இணையத்தினூடாக தகவல் பரிமாற்றங்களின்போது, குறித்த தகவல்கள் பரிசீலிக்கப்படுவதற்கு அனுமதியளிக்கின்ற அமெரிக்க நாட்டின் சர்ச்சைக்குரிய சட்டமொன்றுடன் தொடர்புடைய வழக்கொன்றில், Google நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்ததாகக் கருதப்படுகின்ற வாக்குமூலங்களே, Gmail சேவையின் ரகசியத்தன்மை குறித்த பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

**குறித்த வாக்குமூலத்தில் பின்வருமாறு தகவல் விளக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது எனக் கூறப்படுகின்றது:**

ஒருவருக்கு மற்றொருவர் கடிதமொன்றினை அனுப்புகின்ற பட்சத்தில் குறித்த கடிதமானது, பெறுனருடைய உதவியாளரால் பரிசீலிக்கப்பட்டு, பெறுனருக்கு வழங்கப்பட்டால், கடிதத்தினை அனுப்புபவர் ஆட்சேபிக்க முடியாது. அதேபோல், இணையச் சேவையினைப் பயன்படுத்தி மின்னஞ்சல் ஒன்றினை ஒருவர் அனுப்புமிடத்து, குறித்த மின்னஞ்சலானது, அந்த மின்னஞ்சல் சேவை வழங்குனரால் பார்வையிடப்படுமாயின், அனுப்புபவர் அது குறித்து ஆட்சேபிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக Big Brother Watch என்கின்ற அமைப்பின் பணிப்பாளரான Nick Pickles கருத்துத் தெரிவிக்கையில்; "ஒரு தபால் அலுவலகமானது, தன்னிடத்தில் வருகின்ற எல்லாக் கடிதங்களையும் பிரித்துப் படித்து, அதன்பின்னர் அதனை விநியோகம் செய்வதில்லை" எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.






அத்துடன், பாவனையாளர்கள் இவ்விடயம் குறித்து பெரிதளவில் கவலைப்படாத நிலையொன்று தோன்றினாலும்கூட, Google நிறுவனம் கட்டாயமாக தனது Gmail சேவையின் முகப்புப் பக்கத்தில் பாவனையாளர்கள் இலகுவில் அடையாளம் காணக்கூடியவாறு அதன் ரகசியத்தன்மை குறித்த கொள்கைகளைக் காட்சிப்படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.





எனினும், Google நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில்; தமது பாவனையாளர்களின் பாதுகாப்பு மற்றும் ரகசியத்தன்மை குறித்து தாம் மிகவும் கவனம் செலுத்தி வருவதாகவும் குறித்த விடயம் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்படும் அறிக்கைகள் பொய்யானவை எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன், வேறு எவரும் வழங்காத அளவிற்கு தனித்துவமான பாதுகாப்பு மற்றும் ரகசியத்தன்மை என்பன Gmail சேவையினால் வழங்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தளிர்கரம்





கொடுக்கப்பட்டுள்ள நிறங்களுக்கேற்ப சூரியகாந்தி மலருக்கு நிறந்தீட்டுக.



ஒரே மாதிரியான உருக்களை இணைக்க.

காலநிலைக்கேற்ப மரங்களை அடையாளப்படுத்துக.






புள்ளிகளை இணைத்து, உருவைக் காண்க.

---

# முறைசார், முறைசாரா குழுத்தொடர்பு

ஊடக பாடநெறி 49





குழுத்தொடர்பு நிலைகள் உருவாக்கப்படுகின்ற கள நிலைகளைப் பொறுத்து முறைசார், முறைசாரா குழுத் தொடர்பின் இயல்பினை இனங்கண்டுகொள்ள முடியும். குறிப்பாக நிறுவனம், வழிபாட்டிடம், வீதியோரம், வகுப்பறை, அலுவலகம், வீட்டு முற்றம், நாற்சந்தி, பேருந்து நிலையம் என பல்வேறு இடங்களில் குழுத்தொடர்பு சூழ்நிலைகள் உருவாகின்றன.

## குழுத்தொடர்பின் சிறப்பியல்புகள்

* தொடர்பாடல் செயன்முறையின்போது, கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அவற்றின் அடிப்படையிலிருந்து புதிய கருத்தைக் கட்டியெழுப்பக்கூடிய சூழ்நிலை காணப்படும்.
* குழு அங்கத்தவரிடையே தொடர்பாடலை உயிர்ப்புமிக்க வகையில் முன்னெடுக்க வாய்ப்புக் கிடைத்தல்.
* குழுவினை நெறிப்படுத்த தலைமைத்துவம் ஏற்கப்பட்டு, தொடர்பாடல் செயன்முறை முன்னெடுக்கப்படுதல்.
* குழு தொடர்பின்போது, கூட்டத்தினர் ஒன்றாகச் சேர்ந்து இயங்குகின்ற நிலைமை காணப்படுதல்.
* குழு அங்கத்தவர்கள் பல்வேறு அணுகுமுறைகளையும் நுட்பங்களையும் கையாண்டு கருத்துக்களை கலந்துரையாடுகின்ற வாய்ப்பு உருவாக்கப்படுதல்.
* பொதுவாக குழு தொடர்பின் செயற்பாடுகள் முறையான நிகழ்ச்சி நிரலுக்கும் கால அட்டவணைக்கும் ஏற்ப முன்னெடுக்கப்படுதல்.
* பல்வேறு எண்ணங்கள், உணர்வுகள், திறன்கள் ஒன்றிணைக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் நிலவுதல்.
* குழுத்தொடர்பில்,தொழில்நுட்ப-ஊடக உபகரணங்கள் வழிமூலமும் துணைமூலமும் தொடர்பாடலை வலுவூட்டுவதற்கு வாய்ப்புகள் காணப்படுதல்.



## குழுத்தொடர்பாடல் சந்தர்ப்பங்கள்

* கலந்துரையாடல்கள்.
* வகுப்பறை கற்றல் செயற்பாடுகள்.
* கருத்தரங்கு அல்லது செயலமர்வு.
* விவாதம் அல்லது பட்டிமன்றம்.
* விரிவுரை செயற்பாடுகள்.
* கழகம் அல்லது சங்க ஒன்றுகூடல்கள்.
* பஸ் தரிப்பிடத்தில் கலந்துரையாடுதல்.
* சமயப் பிரசங்கம் அல்லது கூட்டுப்பிரார்த்தனைகள்.
* மாநாடுகள். (தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**පුතා:** **අම්මේ! හෙට අපට පාසල් නිවාඩු දෙනවා.**
**අම්මා පාසලට එන්න ඕනේ.**
அம்மே! ஹெட்ட அபட்ட பாசல் நிவாடு தெனவா.
அம்மா பாசலட்ட என்ன ஓனே.
மகன்: **அம்மா! நாளைக்கு எங்கள் பாடசாலை விடுமுறை வழங்கப்படுகிறது. அம்மா பாடசாலைக்கு வரவேண்டும்.**

**අම්මා:** **ඇයි පුතා හෙට රිපෝට් දෙනවාද?**
எய் புதா ஹெட்ட ரிபோர்ட் தெனவாத?
அம்மா: **ஏன் மகன் நாளைக்கு ரிப்போர்ட் தருகிறார்களா?**

**පුතා:** **ඔව් අම්මේ, අපේ ප්‍රශ්න පත්‍රත් හෙට දෙනවා.**
ஒவ் அம்மே, அபே பிரஷ்ன பத்தரத் ஹெட்ட தெனவா.
மகன்: **ஆம் அம்மா, எங்களுடைய வினாத்தாள்களும் நாளை தருகிறார்கள்.**

**අම්මා:** **පුතා හොඳට විභාගයට ලිව්වා නේද?**
புதா ஹொந்தட்ட விபாகயட்ட லிவ்வா நேத?
அம்மா: **மகன் நன்றாகப் பரீட்சை எழுதினீர்கள் தானே?**

**පුතා:** **ඔව් අම්මේ, හොඳට ලිව්වා.**
**ඒත්, මට සිංහල තමා ටිකක් අමාරු.**
ஒவ் அம்மே, ஹொந்தட்ட லிவ்வா.
ஏத், மட்ட சிங்ஹல தமா டிக்கக் அமாறு.
மகன்: **ஆம் அம்மா, நன்றாக எழுதினேன்.**
**ஆனால், எனக்கு சிங்களம்தான் கொஞ்சம் கஷ்டம்.**

**අම්මා:** **ඇයි සිංහලවලට ලකුණු අඩුද?**
எய் சிங்ஹலவலட்ட லகுணு அடுத?
அம்மா: **ஏன் சிங்களத்திற்குப் புள்ளிகள் குறைவா?**

**පුතා:** **දන්නේ නැහැ, ටිකක් අඩු ඇති.**
தன்னே நெஹெ, டிக்கக் அடு எதி.
மகன்: **தெரியாது, கொஞ்சம் குறைவாக இருக்கும்.**

**අම්මා:** **ඔයාට සිංහලවල මොනවාද අමාරු?**
ஒயாட்ட சிங்ஹலவல மொனவாத அமாறு?
அம்மா: **உங்களுக்கு சிங்களத்தில் என்ன கஷ்டம்?**

**පුතා:** **මට රචනා ලියන්න තමයි බැරි අම්මේ.**
மட்ட ரச்சனா லியன்ன தமய் பெறி அம்மே.
மகன்: **எனக்கு கட்டுரை எழுதுவதுதான் கஷ்டம் அம்மா.**

**අම්මා:** **නිවාඩු කාලෙට ලතා අක්කාගෙන් සිංහල අහගන්න.**
நிவாடு காலெட்ட லதா அக்காகென் சிங்ஹல அஹகன்ன.
அம்மா: **விடுமுறை நாட்களில் லதா அக்காவிடம் சிங்களம் படியுங்கள்.**

**පුතා:** **ඔව් අම්මේ, ලතා අක්කාගෙන් ඉගෙනගන්න ඕනේ.**
ஒவ் அம்மே, லதா அக்காகென் இகெனகன்ன ஓனே.
மகள்: **ஆம் அம்மா, லதா அக்காவிடம் கற்றுக் கொள்ள வேண்டும்.**

## பயிற்சி



**சிங்களத்தில் மொழிபெயர்க்க**

1. விடுமுறை வழங்கப்படுகிறது.
..........................................................
2. வினாத்தாள்களும் தருகிறார்கள்.
..........................................................
3. நன்றாக எழுதினேன்.
..........................................................




**Did எனும் இறந்தகால துணை வினைச்சொல் (Past Tense Auxiliary Verb), வினா வாக்கியங்களில் உதவிபுரியும் வினைச்சொல்லாக (Helping Verb) கையாளப்படும் முறை.**

✱ இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடுநிலை' வாக்கியங்களை, 'வினாநிலை' வாக்கியங்களாக மாற்றியமைப்பதற்கு, Did எனும் துணை வினைச்சொல் (Auxiliary Verb) உதவிபுரிகிறது என முன்னைய பாடத்தில் கற்றோம் அல்லவா?

✱ அவ்வாறே, இறந்தகால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை, 'எதிர்மறை' வாக்கியங்களாக மாற்றியமைப்பதற்கும் 'Did' எனும் துணை வினைச்சொல் உதவிபுரிகின்றது. தகுந்த உதாரணங்கள்மூலம், இதனை இங்கே அவதானிப்போம்.

(அ) நீ நேற்றுக் கடைக்குப் போனாய்.
You went to the shop yesterday.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

★ ***மேற்படி 'உடன்பாடு' வாக்கியத்தை, பின்வருமாறு 'எதிர்மறை' வாக்கியமாக மாற்றியமைக்கலாம்.***

(ஆ) நீ நேற்றுக் கடைக்குப் போகவில்லை.
You did not go to the shop yesterday.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

**குறிப்பு:** இங்கே, எதிர்மறை வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'Did' என்பதற்கு, தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், Did என்பது உதவிபுரியும் வினைச்சொல்லாக (Helping Verb) மாத்திரமே செயல்பட்டுள்ளது.

**மேலும் ஒரு விளக்கம்:** மேலே உள்ள உடன்பாடு வாக்கியத்தில் காணப்படுகின்ற வினைச்சொல்லான 'Went' என்பது இறந்தகால வினைச்சொல் ஆகும். இந்த வினைச்சொல், எதிர்மறை வாக்கியத்தில் 'Did' சகிதம் கையாளப்படுகின்றபோது, 'go' என நிகழ்கால வினைச்சொல்லாக மாற்றம் அடைவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:** went- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
go - நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

✱ You went. (Affirmative)
நீ போனாய். (உடன்பாடு)

✱ You did not go. (Negative)
நீ போகவில்லை. (எதிர்மறை)

(இ) நீ புதிய ஒரு கைத்தொலைபேசி வாங்கினாய்.
You bought a new hand-phone.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) நீ புதிய ஒரு கைத்தொலைபேசி வாங்கவில்லை.
You did not buy a new hand-phone.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

✱ You bought. (Affirmative)
நீ வாங்கினாய். (உடன்பாடு)

✱ You did not buy. (Negative)
நீ வாங்கவில்லை. (எதிர்மறை)

**குறிப்பு:** bought- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
buy- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொலன்னறுவைக் காலத்து ஓவியங்கள்

பொலன்னறுவைக் காலப்பகுதியின் சுவர் ஓவியங்கள் கலைநுட்பத்தில் சிறந்தவையாக விளங்கின. அரச மாளிகைகள் சுவர் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஆனால், இவற்றுள் மிகச் சொற்பமானவையே எஞ்சியுள்ளன. ஓவியங்களை வரைவதற்கு பிக்குகளும் அரசர்களும் ஓவியர்களின் சேவைகளைப் பெற்றுள்ளனர்.

முதலாவது விஜயபாகு மன்னர் காலத்திற்குரிய மஹியங்கனை விகாரையின் கருவறையில் உள்ள ஓவியமே பொலன்னறுவைக் காலப்பகுதியின் மிகப் பழமையான ஓவியமாகக் கருதப்படுகின்றது. இறப்பின் தோல்வி அதில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

திம்புலாகலையில் கிடைத்த ஓவியப்பகுதிகளும் பொலன்னறுவைக் காலப்பகுதிக்குரியவையாகும். தேவர்கள் புத்தபெருமானை வணங்கும் விதத்தை வெளிப்படுத்தும் புள்ளிகொட மலைக்குகையில் உள்ள ஓவியமும் பொலன்னறுவைக் காலத்தைச் சேர்ந்ததாகும். பொலன்னறுவை கல்விகாரையின் 'வித்தியாதார' என்ற குகையின் ஓவியமும் இந்த காலப்பகுதிக்குரிய விசேட ஓவியமாகும். இந்த ஓவியத்தின் சில பகுதிகளை மட்டுமே இப்பொழுது காண முடிகின்றது. ஞான ஒளி பரவியுள்ள புத்தர் பெருமானின் ஓவியமும் இங்கு வரையப்பட்டிருந்ததற்கான சான்றுகள் உள்ளன. பொலன்னறுவைக் காலப்பகுதியினைச் சேர்ந்த அதிகமான ஓவியங்களை திவங்க என்ற சிலைகள் இருப்பிடத்தில் காணக்கூடியதாக உள்ளது. கர்ப்பக்கிரகம் எனப்படும் கருவறை முழுவதும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இங்குள்ள ஓவியங்கள் தத்ரூபமாக இருப்பதுடன், போதிசத்வர் உருவம் கொண்ட ஓவியம் அஜந்தா குகை ஓவியங்களை ஒத்ததாக இருப்பதாகவும் தொல்லியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.








## நோன்புப் பெருநாள் சிறப்பு நிகழ்வுகள்




நோன்புப் பெருநாளை முன்னிட்டு பொத்துவில் *Festival Programme Group* அமைப்பினால் நோன்புத் தினத்தன்றும், அதற்கு மறுநாளும் மூன்றாவது வருடமாக நடத்திய 'திறமைகளின் களம்' எனும் போட்டி நிகழ்வுகளில் சிறுவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துவதையும் கலந்துகொண்ட ஏனையவர்களையும் படங்களில் காணலாம். இந்நிகழ்வுகளுக்கு 'விஜய்' பத்திரிகை ஊடக அனுசரணை வழங்கியது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்ற்றீரியா



வைரசுக்கு அடுத்த மிகச் சிறிய அங்கிக்கூட்டம் பக்ற்றீரியா ஆகும். ஏனைய அங்கிகள் உயிர்வாழ முடியாத சாதகமற்ற சூழல்களிலும் பற்றீரியாக்களினால் உயிர்வாழ முடியும்.

**பக்ற்றீரியாவின் வடிவ அமைப்புப் பாகுபாடு:**

கொக்கஸ் - கோளவுருவானது
பெஸிலஸ் - கோலுருவானது
ஸ்ட்ரெப்டோகோக்கஸ் - சுருளியுருவானது
விப்ரியோ-காற்புள்ளி வடிவானது

**பக்ற்றீரியாவின் போஷணை அடிப்படைப் பாகுபாடு:**

1. தற்போஷணை: ஒளித் தொகுப்பு ரசாயனத் தொகுப்பு
2. பிறபோஷணை: அழுகல் வளரி, ஒன்றிய வாழி, ஒட்டுண்ணி

**பக்ற்றீரியாவின் சுவாச அடிப்படை பாகுபாடு:**

* காற்று வாழ்
* காற்றின்றிய வாழ்

**பக்ற்றீரியாவின் பயன்கள்:**

யோகட், பாற்கட்டி என்பவற்றின் தயாரிப்பிலும் தோல் பதனிடல், தேயிலை பதனிடல், தேங்காய் மட்டை, சணல் என்பவற்றிலிருந்து நார்களைப் பிரித்தெடுத்தல் போன்றவற்றிற்கும் பக்ற்றீரியாக்கள் உதவுகின்றன.

**பக்ற்றீரியாவின் தீமைகள்:**

காச நோய், நெருப்புக் காய்ச்சல், கொலரா (வாந்திபேதி), சிபிலிஸ், தொண்டைக் கரப்பான், பக்ற்றீரியா வயிற்றுளைவு போன்ற நோய்களை உண்டாக்கும்.

ஏ.அஹ்மட்,
மின்ஹாஜ் மு.வித்.

# தாய்



பொறுமையின் சிகரம்
நல்லுணர்வுகளின் இருப்பிடம்
தாயகத்தின் சின்னம்
நல்வாழ்க்கையின்
வழிகாட்டல்
மண்ணில் ஒளிதரும் விளக்கு என
உலகிலே விளங்குகிறாள்
எம்மை ஈன்றெடுத்த இனிய
தாய்!

ப.யதுஷா,
ஓமந்தை மத்திய கல்.,
மருதங்குளம், ஓமந்தை.

# முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்






இரண்டு தவளைகள் ஒரு நாள் பால் பாத்திரம் ஒன்றில் தவறி விழுந்து விட்டன. பாத்திரத்தை விட்டு வெளியே வருவதற்கு அவற்றிற்கு வழி தெரியவில்லை. முதலாவது தவளை "இதிலிருந்து நான் எப்படித் தப்பிக்கப் போகிறேன். ஐயோ! நான் இறந்துவிடப்போகிறேனே" என்று புலம்பியது. மன வலிமை அற்ற அந்த தவளையின் கால்கள் ஆற்றலை இழந்தன. இதனால், சிறிது நேரத்தில் அது பாலில் மூழ்கி இறந்து விட்டது. இரண்டாவது தவளையோ, 'இதிலிருந்து நான் எப்படியும் தப்புவேன். கடைசிவரை என் முயற்சியைக் கைவிடமாட்டேன்' என்று நினைத்தது. அதனால், சோர்வே இன்றி கால்களை உதைத்துக் கொண்டே இருந்தது. இதனால், பால் நன்றாகக் கடையப்பட்ட நிலையை அடைந்து வெண்ணெய் திரண்டு மேலே மிதக்கத் தொடங்கிற்று. மிதந்த வெண்ணெயின் மேலே அமர்ந்தவாறே, தவளை பாத்திரத்தை விட்டு வெளியே குதித்துத் தப்பித்துக் கொண்டது.

எச்.எம்.அஸ்லம்,
ஓட்டமாவடி தேசிய பாட.,
ஓட்டமாவடி.

# அறிந்துகொள்ளுங்கள்

★ சாம்பலாகினாலும் மீள் உயிர் பெறக்கூடிய பறவை என்று கூறப்படுவது - பீனிக்ஸ் பறவை.
★ ஜீன்ஸ் உடைகள் கெலிஃபோர்னியாவில் உருவாகின
★ சுவிஸ் வங்கி ரகசியத்தன்மையைப் பேணுவதில் உலகப் புகழ்பெற்றது.
★ நட்சத்திர மீனுக்கு மூளையே இல்லை.

ஜே.எம்.அக்ரம், ஸாஹிரா பாடசாலை, புத்தளம்.

# அறியாதவை சில....

* பூரண ஆயுள் என்பது 120 வருடங்களாகும்.
* ஒரு தலைமுறை என்பது 33 வருடங்களைக் கொண்டது.
* நமது இதயம் ஒரு நாளில் சுமார் 1,03,689 முறைகள் துடிக்கின்றது.
* கைரேகைகளைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
* மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு ஆகும்.
* மனிதனில் மிகவும் பலமானது நகங்களாகும்.

ரிஸ்மினா முஸம்மில்,
அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாதகமை.

# குருதி உறிஞ்சும் வெளவால்






குருதி உறிஞ்சும் வெளவால்களான 'வம்பயர்' (Vampire) வெளவால்களின் பிறப்பிடம் அமெரிக்கா ஆகும். இவை மெக்ஸிகோவிலிருந்து பிரேசில் வரையுள்ள பிரதேசங்களிலும் சிலி, ஆர்ஜென்டீனா ஆகிய நாடுகளிலும் பரந்து காணப்படுகின்றன. இவற்றின் நாசி கூம்புருவானது, வெப்பம், குளிர் போன்றவற்றை உணர்ந்து இனங்காண உதவும் வாங்கிகள் நாசியின் மேல் அமைந்துள்ளன. இவ்வாங்கிகள் இரையின் குருதிக் குழாய்களை இனங்காணவும் உதவுகின்றன. குருதி உறிஞ்சும் வெளவால் ஒரு பாலூட்டி ஆகும். சிறிய புறச் செவிகளும் மேற்றோலுக்குரிய சிறிய வாலும் கொண்டது. வாயின் முற்புறமாக அமைந்துள்ள வெட்டும் பற்கள் இரையை வெட்ட உதவுகின்றன. இதன் பின்புறப் பற்கள் மிகவும் சிறியவை. வம்பயர் வெளவால் ஒரு நோய்க் காவியாகவும் செயற்படுகின்றது. இவற்றின் உமிழ்நீரினூடாக நீர் வெறுப்பு (விசர்நாய்க்கடி) நோய்க் காரணிகள் பரப்பப்படுகின்றன. எனினும், இவற்றின் உமிழ்நீர் மருத்துவப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

ஏ.ஆர்.எம்.ரஸ்மி,
ப/வெளிமடை மு.ம.வித்.,
வெளிமடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


PUBLIC LIBRARY

## இசைக்குறிப்பினைக் கண்டுபிடிக்க வழி காட்டுங்கள் — 2



## படங்களுக்குரிய சொற்களை உரிய கட்டங்களில் எழுதிப் பூர்த்திசெய்க — 1

elephant
horse
rhino
ant
crocodile
panda
eagle
caterpillar
crab







தயாரிப்பு - ஸாரா


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.09.11 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 433
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## பழமொழிகளைப் பூர்த்திசெய்க — 5

1. எண்சாண் உடம்பிற்கு ..............................
2. .............................. சுற்றம் இல்லை.
3. பசி வந்தால் ..............................
4. .............................. புல்லும் ஆயுதம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 49



**மேலிருந்து கீழ்**

01. மல்லிகையில் ஒரு வகை.
02. சாபம், பாவம் முதலியவற்றிலிருந்து விடுபடும் நிலை.
03. சந்திரன்.
06. 'அன்பு' என்றும் அர்த்தப்படும். (தலைகீழ்)
08. வீட்டு மிருகமொன்று.

**இடமிருந்து வலம்**

01. ஏழு வர்ணங்களுடன் வானில் தோன்றும்.
04. பிள்ளையாருக்குப் படைப்பது.
05. தோழன்.
07. பூனைக்கு எதிரி.
08. 'இல்லை' என்பதன் எதிர்ப்பதம். (மாறியுள்ளது)
09. சிறையில் இருப்பவன்.
10. திலகம். (மாறியுள்ளது)


**குறுக்கெழுத்துப் போட்டி இல. 48 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கொ | லை | க் | 2 க | ள | ம் |
| ழு | 3 கு | | ன | | |
| ந் | | 4 து | வா | ர | ம் |
| 5 த | ன | வா | ன் | | த |
| ன் | | லை | | ரி | 6 ம |
| | | | ம் | 7 ப | 8 தா |

## பொருத்தமற்ற சொல்லில் கோடிடுக — 4


1. புகையிரதம், பேரூந்து, சரக்குக் கப்பல்
2. தென்னை, மா, பனை
3. மேளம், வாத்தியக்கருவி, கிட்டார்
4. நீர்நிலை, ஆறு, குளம்
5. கால்பந்து, விளையாட்டு, கூடைப்பந்து

## தரவுகளுக்கமைய விடையளிக்க — 3




## அறிவுக்கு விருந்து - 430 விடைகள்

போட்டி: 02 போட்டி: 03




**போட்டி: 04**

1. வாசிகசாலை - வாசி, வா, சாலை
2. செய்தித்தாள் - செய், செய்தி, தாள்
3. பாதாளம் - பாதாம், தா, தாளம்
4. நவதானியம் - நவம், தா, நம்

**போட்டி: 05**

1. வறுமை 2. பேத்தை 3. மருதம் 4. கொல்லன்

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 430 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.பஹீம்,நாபாவள.

**போட்டி: 02**
சி.ஷர்மிலன், கொக்குவில்.

**போட்டி: 03**
ஏ.அகிலா, தெல்கஹதெனிய.

**போட்டி: 04**
ர.கீர்த்திகா, கோண்டாவில்.

**போட்டி: 05**
என்.துஷ்மிதா, கிருலப்பனை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- பா.தசாங்கி, திருப்பழுகாமம்.
- இ.இஸ்னா, ஒலுவில்-02.
- எம்.அஸ்ரஜ், கீரியங்கள்ளி.
- என்.ஜதா, எஹலியகொடை.
- எஃப்.அரஃபா, பொல்கஹாவல.
- எஸ்.பியூலா, நொச்சிமுனை.
- ஜே.அனுராதை, சித்தங்கேணி.
- மரின் ஜெனீஃபர், மன்னார்.
- ஸைனப் அகீலா, கஹட்டோவிட்ட.
- தே.ரவிப்பிரகாஷ், இரத்தினபுரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...



## எட்வர்ட் மனே (1832-1883)

பிரான்ஸ் நாட்டு அரசியலுடன் மிகவும் நெருக்கமான செல்வந்தக் குடும்பத்தில், 1832 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி எட்வர்ட் மனே பிறந்தார். இவர், சிறுவயதிலிருந்தே பிற்காலத்தில் தான் தலைசிறந்ததோர் ஓவியராக வர வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டிருந்தார். 1841 ஆம் ஆண்டு மனேயின் மாமனாரான எட்மன்ட் ஃபுர்னியர், இவரை கொலேஜ் ரோலின் இடைநிலைப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் 1845 ஆம் ஆண்டில் ஓவிய சிறப்பு வகுப்பில் இணைந்து கொண்டார். 1850-1856 வரை தோமஸ் கூச்சர் என்ற ஓவிய ஆசிரியரிடம் ஓவியம் கற்றுக்கொண்டார்.

19 ஆம் நூற்றாண்டில் நவீன வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஓவியங்களை வரைந்த ஓவியர்களில் இவரும் ஒருவர். மேற்கத்தேய ஓவியப் பாணி, யதார்த்தவாதத்திலிருந்து உணர்வுப் பதிவுவாத பாணிக்கு மாறக் காரணமாக இருந்தார். இவரது ஓவியங்கள் பெரும் சர்ச்சைக்குரியனவாக அப்போது இருந்தாலும், இளம் ஓவியர்கள் இவரது உணர்வுப் பதிவுவாத முறையைப் பின்பற்றி வரையத்தொடங்கினர். இவரது இந்த ஓவியப் பாணியே நவீன ஓவியத்திற்கு (Modern Art) வித்திட்டது.

எட்வர்ட் மனே, தமது வாழ்நாட்களின் கடைசி 20 ஆண்டுகளில், புதுமையான தனிப்பாணியை உருவாக்கிக்கொண்டார். 1856 இல் மனே தமது சொந்த ஓவியக்கூடத்தைத் தொடங்கினார். இக்காலகட்டத்தில், தளர்ச்சியான தூரிகையைக் கொண்டு எளிய நடையில் ஓவியங்களைத் தீட்டினார். The Railway, பிச்சைக்காரர்கள், பாடகர்கள், நாடோடிகள், வயது முதிர்ந்த இசைக்கலைஞன், உணவு விடுதியில் மக்கள், காளை மாட்டுச் சண்டை போன்ற ஓவியங்கள் உட்பட, மேலும் பல்வேறு ஓவியங்களைத் தீட்டி உலகப் புகழ்பெற்றார். இவர், 1883 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி தனது 51 ஆவது வயதில் பெரிஸில் உயிர் துறந்தார்.


வயது முதிர்ந்த இசைக்கலைஞன்


The Railway







மருதமுனை ஜமாஅத்தே இஸ்லாமிய மாணவர் அமைப்பான ஜமஇய்யா அஸாபிர் இணைந்து தரம் 6, 7, 8 மாணவர்களை மையப்படுத்தி 'அறிவில முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு' எனும் கருப்பொருளில் கண்காட்சி நிகழ்வு ஒன்றை அண்மையில் மருதமுனை ஜமாஅத்தே இஸ்லாமியின் அலுவலகத்தில் நடத்தியது. அந்த நிகழ்வையே காண்கிறீர்கள்.

(படமும் தகவலும்: மருதமுனை றாசிக் நபாயிஸ்)

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



நாவலப்பிட்டி கோணவலப்பத்தனையைச் சேர்ந்த தியாகராஜா-சுதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வி டிலுக்ஷினி, தனது இரண்டாவது பிறந்தநாளை 29.08.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: யோகேஸ்வரி)




கிண்ணியா ஈச்சந்தீவைச் சேர்ந்த சிவசங்கர்-பிரியதர்ஷினி தம்பதியரின் செல்வப் புதல்வன் தேமதுரன், தனது முதலாவது பிறந்தநாளை 24.08.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் அருள்பெற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



தெல்லிப்பளையைச் சேர்ந்த யோட்ஸ் அன்ரன்-தர்மினி தம்பதியரின் செல்வப் புதல்வன் சுலக்சன், தனது பதினான்காவது பிறந்தநாளை 20.08.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு


கி.நிரோஷன்,
மாதம்பை இல 2 த.வித்.,
இறக்குவானை.


கி.டானியா,
மாத்தளை பாக்கியம் தே.கல்.,
மாத்தளை.


என். அஷ்வின் பிரேம்,
நு/ஹோம்வுட் த.வித்.,
போபத்தலாவ.


ஐ.பூர்வஜா,
இறம்பைக்குளம் ம.ம.வித்., வவுனியா.


ச.மிதும்,
அட்வண்டிஸ்ட் சர்வதேச பாட.,
வவுனியா.


லோ.சுவஸ்டிகா,
யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவின் 'சார்' அரச வம்சத்தின் வீழ்ச்சி





கி.பி. 1547 முதல் கி.பி 1917 வரை ரஷ்யாவின் அரச ஆட்சிமுறையானது, 'சார்' (Tsar) அரச வம்சத்தின் வசமே இருந்து வந்தது. 'ரூரிக்' (Rurik) என்ற அரச வம்சத்தில் இருந்தே அது ஆரம்பமாயிற்று. இந்த அரச வம்சமானது, கி.பி. 1547 முதல் 1598 வரை அரசாண்டது. அதன்பின்பு இடம்பெற்ற மோதல்களுக்கு மத்தியிலும் இந்த அரச வம்சத்தின் சில சந்ததிகள் ரஷ்யாவை ஆண்டன. அரச வம்சத்தின் 'ரொமானொவ் அரச வம்சம்' (Romanov Dynasty) 1613 ஆம் ஆண்டு ஆரம்பமாயிற்று. முதலாவது மிக்கைல் ஃபிடொரொச்சி இதன் ஆரம்பகர்த்தா ஆவார்.

இந்த அரச வம்சம் எந்தவித பிரச்சினைகளும் இன்றி 1696 வரை ஆட்சியை நடத்தியது. எவ்வாறாயினும், மீண்டும் ஆரம்பமான ரொமானொவ் அரசவம்சத்தில் அரசர் மட்டுமன்றி அரசியரும் ஆட்சியில் பங்குகொண்டனர். இந்த பரம்பரையின் இறுதி மன்னராக 1894 இல் இரண்டாவது நிக்கலஸ் முடிசூட்டப்பட்டார். அன்றைய காலத்தில் ரஷ்ய அரசாட்சி சாதாரண பொதுமக்களைப் பெரும் துன்பத்தில் ஆழ்த்தும் வகையிலான கொடுங்கோல் ஆட்சியாகவே இருந்தது. இதற்கு எதிராக அணிதிரண்ட கம்யூனிஸக் கட்சி, 1917 இல் ரஷ்யாவில் புரட்சி ஒன்றை நடத்தி, மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இதனை அடுத்து, அரச வம்சத்தின் இறுதி சந்ததியான இரண்டாவது நிக்கலஸ் மன்னர் உட்பட, அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் 1918 ஜூலை 17 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர்.

## ரஷ்யப் புரட்சி

1917 மார்ச் 8 ஆம் திகதி முதல் நவம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெற்ற ரஷ்யப் புரட்சிக்கு பொல்ஷேவிக் கட்சியின் தலைவர் லெனின் தலைமை தாங்கினார். புரட்சி வெற்றி அடைந்த பின்னர் சோவியத் ரஷ்ய கூட்டாட்சி நிறுவப்பட்டது.



## சார் அரச வம்சம்

16 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான சார் அரசவம்சத்தினர், சுமார் 350 ஆண்டுகள் ரஷ்யாவை ஆட்சி செய்தனர். சார் என்ற சொல்லை 'tsar' என்றும் 'Czar' என்றும் ஆங்கிலத்தில் எழுதுவர். இதன் அர்த்தம் 'ஆண் தலைமையிலான அரசாட்சி முறை' என்பதாகும். எனினும் பின்னைய காலகட்டங்களில் ராணிகளும் நாட்டை ஆட்சி புரிந்தனர். 'Czar' என்பது லத்தீன் சொல்லாகும். அதன்பொருள் 'மகா பலம் பொருந்தியவர்கள்' என்பதாகும். இந்த சார் அரசவம்ச ஆட்சிக்காலப்பகுதியில், உலகின் பலம் பொருந்திய நாடாக ரஷ்யா விளங்கியது. இந்த வம்சத்தின்கீழ் பல சந்ததிகள் நிலவின. ரொமானொவ் ராஜ சந்ததி அதன் இறுதி சந்ததியாகும்.

## இரண்டாவது நிக்கலஸ் மன்னன் (1868-1918)



**1868**
மே 19 ஆம் திகதி இரண்டாவது நிக்கலஸ் பிறந்தார்.

**1894**
ஏப்ரல் 8ஆம் திகதி அலெக்சாண்ட்ரா ஃபிஒடொரொவ்னாவை மணந்தார். இருவரும் ஐந்து குழந்தைகளுக்கு பெற்றோராயினர்.



**1894**
ஒக்டோபர் 20 ஆம் திகதி இவரின் தந்தையான மூன்றாவது அலெக்சாண்டர் மன்னன் வயிற்றில் ஏற்பட்ட புற்றுநோயினால் மரணமடைந்தார். இதன்படி இரண்டாவது நிக்கலஸ் புதிய சார் மன்னராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

**1895**
நவம்பர் 15 ஆம் திகதி இரண்டாவது நிக்கலஸ் மன்னனின் முதலாவது புதல்வி பிறந்தார். அவர் ஒல்கா ரொமானொவ் என்றழைக்கப்பட்டார்.

**1896**
மே 26 ஆம் திகதி இரண்டாம் நிக்கலஸ் மன்னனின் முடிசூட்டு விழா நடைபெற்றது.



**1913**
மார்ச் 06 ஆம் திகதி ரொமானொவ் ஆட்சியின் 300 ஆவது நிறைவு விழா கொண்டாடப்பட்டது.



**1916**
டிசம்பர் 16 ஆம் திகதி க்றிகோறி ரஸ்புட்டின் படுகொலை செய்யப்பட்டார்.

**1917**
மார்ச் 15 ஆம் திகதி இரண்டாம் நிக்கலஸ் மன்னன் தனது பதவியைத் துறக்கத் தீர்மானித்தார்.

**1918**
ஜூலை 17 ஆம் திகதி, இரண்டாவது நிக்கலஸ் மன்னன் மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் சைபீரியாவின் யெக்கடெரின் பர்க்கில் படுகொலை செய்யப்பட்டனர்.

**1918**
ஜூலை 18 ஆம் திகதி எலிசபெத் ஃபிஒடொரொவ்னா உட்பட, ரொமானொவ் சந்ததியில் ஐவர் படுகொலை செய்யப்பட்டனர்.

**1998**
ஜூலை 16 ஆம் திகதி ரொமானொவ் குடும்பத்தினரின் உடல்கள் கிடைத்தன. அவை மீண்டும் அடக்கம் செய்யப்பட்டன.






தற்போது ரஷ்ய அரசாங்கத்தின் கீழுள்ள க்ரெம்ளின் அரசமாளிகை சார் அரச குடும்பத்தின் ஒரு சொத்தாகும்.

## க்றிகோறி ரஸ்புட்டின் Grigory Rasputin (1869-1916)



சார் அரச வம்சம் குறித்து, மக்கள் மத்தியில் தவறான எண்ணங்கள் ஏற்படக் காரணமாக இருந்தவர் என்று இவரை வரலாறு குறிப்பிடுகின்றது. இவரின் செயற்பாடுகளே அரசின்மீது மக்களிடையே வெறுப்பு ஏற்படக் காரணமாக அமைந்தது. அரச பரம்பரையினரின் நெருக்கத்துக்குரியவராக இருந்த இவர், மாய மந்திர வித்தைகளை செய்யும் துறவியாக பிரசித்தி பெற்றிருந்தார். இவர் ஒரு மன நோயாளி என்றும் கூறப்படுகின்றது. அரச வம்சத்தினரைக் காப்பாற்றும் நோக்கில் பல சந்தர்ப்பங்களில் அவரைப் படுகொலை செய்ய அரச குடும்ப உறுப்பினர்கள் நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது மூதாதையர்களின் வாழ்க்கை முறையானது, இயற்கையுடன் பின்னிப் பிணைந்திருந்தது. அவர்களுக்கு இயற்கை மாற்றங்கள் குறித்த மிகச்சிறந்த விழிப்புணர்வும் இருந்து வந்துள்ளது. இயற்கையுடன் ஒன்றிணைந்த வாழ்க்கையின் காரணமாகவே, அவர்கள் இந்த அறிவினைப் பெற்றிருந்தனர். அந்தவகையில், காற்று வீசும் விதத்தின் அடிப்படையில் காலநிலை குறித்து அவர்கள் எவ்வாறு அறிந்துகொண்டார்கள் என்பதனைப் பார்ப்போம்.



# காற்றின் தன்மைகொண்டு காலநிலையை அறியலாம்

### நிலத்தில் வெடிப்பைத் தரும் காற்று

மிகவும் வறட்சியான காலத்தில் காற்று உலர்வாகவும் வேகமாகவும் வீசுவதால், நிலத்தில் வெடிப்புகள் ஏற்படுகின்றன. இதனால், எமது மூதாதையர்கள் இந்தக் காற்றினை 'நிலத்தை வெடிக்கச் செய்யும் காற்று' என்று அழைத்தனர். வறட்சி, மேலும் சில காலம் நீடிக்கும் என்பதனை இவ்வாறான காற்று வீசுவதனூடாக அக்கால மக்கள் அறிந்து வைத்திருந்தனர்.



### இலைக்காற்று

வறட்சி ஆரம்பமாகிவிட்டது என்பதனை அறிந்துகொள்ள உதவும் காற்று வகையாக இந்த இலைக்காற்றைக் குறிப்பிட முடியும். உயரத்திலிருந்து சுழன்று வரும் இக்காற்றினால் மரங்களில் உள்ள இலைகள், சருகுகள் என்பன உதிர ஆரம்பிக்கும். இலைக்காற்று வீச ஆரம்பித்து சில நாட்களின் பின்னர் பெரும்பாலான மரங்களின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடுவதுண்டு. அதன் பின்னர், அவை மீண்டும் ஏற்படக்கூடிய காற்றினால் உதிரத்தொடங்குகின்றன.

### அடித்துச் செல்லும் காற்று

வறட்சி மேலும் நீடிக்கும் என்பதனை பறைசாற்றும் காற்றாக அடித்துச் செல்லும் காற்றைக் குறிப்பிடமுடியும். இந்த காற்றினால் நிலத்தில் உள்ளவை அடித்துச் செல்லப்படுவதனால், இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தக் காற்று ஒரு திசையை நோக்கி வீசுவதோடு, தரை மட்டத்திலிருந்து மிகவும் வேகமாகவும் வீசக்கூடியது.

### ஒலி எழுப்பும் காற்று

வறட்சி கடுமையாகக் காணப்படும் பொழுதுகளில் திடீரென வேகமாக வீசும் காற்றானது 'ஹூம்' என்ற ஒலியுடன் வீசும். இதனால், இந்தக் காற்றினை 'ஒலி எழுப்பும் காற்று' என்று கூறுகின்றனர். வயல்கள் உள்ள பகுதிகள், வாவிகள், வெட்டவெளிகளில் இந்தக் காற்று வீசும் போது 'ஹூம்' என்ற ஒலியை, நன்கு கேட்கக்கூடியதாக இருக்கும். இந்தக் காற்றானது, வறண்ட காலநிலை மேலும் தொடரும் என்பதற்கான அறிகுறியே என்று எமது மூதாதையர்கள் அறிந்து வைத்திருந்தனர்.

### மணல் காற்று

வறட்சிக் காலத்தில் மணல்துகள்கள் ஒன்றிணைந்து ஓரிடத்தில் சூழ்ந்து காற்றாக மேல்நோக்கி எழும். இந்தவகையான காற்றினை 'மணல் காற்று' என்றனர். இந்த மணல் காற்று வீசுவதானது, உலர்வான காலநிலை மேலும் தொடர்வதற்கான அறிகுறி என்பதனை எமது மூதாதையர்கள் அனுபவத்தின் வாயிலாக அறிந்து வைத்திருந்தனர்.

### குளிர் காற்று

குளிரான நீர்த்துளிகள் கொண்ட காற்றினை 'குளிர் காற்று' என்று அழைத்தனர். இந்தக் காற்று உடலில் படும்போது, அதில் உள்ள குளிர், உடலை மெய்சிலிர்க்க வைக்கின்றது. இந்தவகையான காற்று வீசும்போது, மழைபெய்யும் என்று அவர்கள் அனுபவத்தினூடாக அறிந்து வைத்திருந்தனர். மழை உள்ள பிரதேசங்களில் இருக்கும் நீரில் உள்ள துணிக்கைகளை எடுத்துக் கொண்டே, இந்த குளிர்காற்று வீசும். இந்த காற்று வீசும் திசையை வைத்து மழைபெய்யும் பிரதேசத்தை அறிந்து கொள்ளும் ஆற்றல் எமது முன்னோர்களுக்கு இருந்துள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பான பெற்றோர்களே!




சில பெற்றோர் தமது பிள்ளைகளை இடைநடுவில் சாரணர் செயற்பாடுகளில் இருந்து நிறுத்தி விடுகின்ற நிலைமையினால், பிள்ளையின் மனநிலையில் பெரும் குழப்பம் ஏற்பட்டு பிள்ளை கல்வியிலும் நாட்டம் காட்டாமல் வெறுப்புடன் இருப்பதைக் காணமுடிகின்றது.



அன்பான பெற்றோர்களே! கல்வி எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு இணைப்பாடவிதான செயற்பாடாகக் கருதப்படும் வினைத்திறனான செயற்பாடுகளும் முக்கியமாகின்றன.

இதனால், உங்கள் பிள்ளைகள் சாரணராக பாடசாலையில் கற்கின்ற காலத்தில் ஜனாதிபதி சாரணர் விருது அல்லது ஜனாதிபதி சாரணியர் விருது அல்லது இதற்குச் சமமான வேறு சான்றிதழ்கள் வைத்திருப்பின், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்தில் பட்டப்பயில் நெறிகளுக்கு விசேட அனுமதிக்கமைய, ஒவ்வொரு கற்கை நெறியிலும் தீர்மானிக்கப்பட்ட அனுமதியின் 0.5% வரையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட கற்கைநெறிக்குச் செல்ல பரீட்சார்த்தியின் 'Z' புள்ளி மாவட்டத்திற்கான அனுமதிக்குரிய வெட்டுப்புள்ளியின் 0.2000 க்கு உட்பட்டதாக இருந்தால் மட்டுமே அனுமதிக்கு பரீட்சார்த்தி பரிசீலிக்கப்படுவார் என்பதுடன்,நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவார் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 'பல்கலைக்கழகத்தில் பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதி' எனும் வெளியீட்டு நூலில் உள்ள விடயத்தினை உங்களுக்காக விஜய் சாரணர் உலகம் நினைவூட்டுகின்றது. இதேபோன்ற விசேட அனுமதி தேசிய கல்வியியற் கல்லூரி உட்பட, ஏனைய துறைகளுக்கும் கொடுக்கப்படுகின்றது.

# உயர் விருதுகள் பெற்று, சாதனை படைத்த வவுனியா மாவட்ட சாரணர்கள்

திரிசாரணர் பிரிவிற்குரிய அதிஉயர் விருதாக இலங்கை சாரணர் சங்கத்தினால் வழங்கிக் கௌரவிக்கப்படும் பேடன் பவல் விருது, திரிசா ரணன் சுந்தரலிங்கம் காண் டீபனுக்குக் கிடைத்தது. இவர் விபுலானந்தாக் கல் லூரியின் மாணவராவார். இந்த விருது, வவுனியா மாவட்ட சாரணர் வரலாற்றில் முதல் தடவையாகக் கிடைக்கும் விருதாகும். இவர் ஜனாதிபதி சாரணர் விருதினைப் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



நிலானி இராசலிங்கம்


நிலாந்தி சிவஞானசுந்தரம்


திரிசாரணன் சுந்தரலிங்கம் காண்டீபன்

அத்துடன், அண்மையில் இரு சாரணர் பெண்கள், சாரணர் பிரிவின் அதிஉயர் விருதான 'ஜனாதிபதி சாரணர் விருது' பெற்று தமிழ்ப் பிரதேசத்தில் முதல்முறையாக சாதனை படைத்துள்ளனர். இவர்கள் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரி சாரணர் பெண்களான நிலானி இராசலிங்கம், நிலாந்தி சிவஞானசுந்தரம் ஆகிய இரு மாணவிகளுமாவர்.

# இரட்டைச் சுழல் வளையல் கட்டு




# 11 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1963


**11 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1963**
**கிரேக்கம்**



| | |
|---|---|
| 10,000 சாரணர்கள் | மரதன் |
| 86 நாடுகள் | ஓகஸ்ட் 1-11 |




பதினொராவது உலக சாரணர் ஜம்போரி 1963 இல் கிரேக்க நாட்டில் மரதன் என்ற இடத்தில் நடைபெற்றது. இதில் 10,000 சாரணர்கள் உட்பட 86 நாட்டுச் சாரணர்கள் கலந்துகொண்டனர். இதுவரை நடைபெற்ற பத்து ஜம்போரிகளிலும் பார்க்க இந்த ஜம்போரியில் அதிக நாடுகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த பதினொராவது உலக சாரணர் ஜம்போரியின் நோக்கம் 'Higher and Wider' என அறிவிக்கப்பட்டிருந்தது. கிரேக்க நாட்டின் இளவரசர், ஜம்போரியை ஆரம்பித்து வைத்தார்.இந்த ஜம்போரியில் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திய துன்ப நிகழ்வொன்றும் நிகழ்ந்தது. அதாவது, ஜம்போரியில் கலந்துகொள்ள வந்த பிலிப்பைன்ஸ் நாட்டு விமானத்தில் பயணம் செய்த சாரணர் குழு ஒன்று விமான விபத்தில் உயிரிழந்த சோக நிகழ்வு ஜம்போரியில் கூடியிருந்தோர் அனைவரையும் உற்சாகம் இழக்க வைத்தது. இந்தத் துக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக ஜம்போரி கொடிகள் அனைத்தும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன. அத்துடன், கிரேக்க வரலாற்றை நினைவூட்டும் வகையில் பல நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. முகாமின் இறுதியில் 'மரதன் தீச்சுடர்' அமெரிக்காவைச் சேர்ந்த சாரணர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த தீச்சுடர்மூலம் 12 ஆவது உலக சாரணர் ஜம்போரியில் சுடர் ஏற்றுவதற்கான ஏற்பாடாக அந்நிகழ்வு இருந்தமை குறிப்பிடத்தக்கது.







## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஓகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| ஆர்மேனியா | 2,303 | 1997 | 1912 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






JAMES DYSON AWARD

'எயார்ப்ளோவ்' குடை விரிக்கப்படுதல்.

குவின்டன் டெபானின் Airblow 2050 புதிய நிர்மாணமானது, கடந்த வருடத்தில் ஜேம்ஸ் டைஸன் விருதிற்கென பரிந்துரைக்கப் பட்டிருந்தது.



23 வயதுடைய குவின்டன் டெபான்தான் இந்த குடையின் வடிவமைப்பாளராவார்.













# துணிவிரிப்பு இல்லாத நவீன குடை Airblow

வழமையான அமைப்பைக் கொண்டிராத புதுவித அமைப்பிலான எதிர்காலக் குடையொன்றைப் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் குடையில் மழைநீரைத் தடுக்கும் துணி விரிப்பு இருக்காது வெறும் தடியொன்றைப் பிடித்துச் செல்வதைப் போன்று நடந்தால் போதும். சுற்றிவர இயந்திரக் கதிரியக்கத்தின் காரணமாக, மழைநீர் ஆவியாவதுடன் உடலில்படுவது தவிர்க்கப்படுகின்றது. இது இன்னமும் பரீட்சார்த்த மட்டத்திலேயே உள்ளது. முழுமையாக விஞ்ஞான தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த குடையானது, பார்வைக்கு வெறுமனே கைப்பிடியொன்றைப் போலவே காட்சிதரும். உரிய வகையில் இயங்கும்போதே, அது குடையாக மாறும். அநேகமாக 2050 ஆம் ஆண்டில் இதனை பாவனைக்கு வரக்கூடிய வகையிலேயே இது குறித்தான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**இதிலுள்ள மோட்டார் பற்றரியின் துணையிலேயே இயங்குகின்றது.**

**இதன் பயன்கள்**

* மழை நின்ற பின்னர் குடையை உலர்த்தவேண்டிய தேவை ஏற்படாது.
* குடையானது, காற்றின் வேகத்தினால் அடித்துச் செல்லாத தன்மையுடையது.
* செல்லும் பாதையில் இடைஞ்சலாக இருக்காது.







Airblow 2050 குடையின் பாவனையை உணர்த்தும் படங்கள் சில...

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, செப்டெம்பர் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 04, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org